Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–24 | 08–07–2004 | வியாழக்கிழமை | ஓசை –141

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.- 024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.- 021-2225987
(சி-9943)

# கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தினுள் பெண் ஒருவரால் குண்டு வெடிக்கவைப்பு!

## ஒரு இன்ஸ்பெக்டர் ஒரு பொலிசார் உட்பட ஐவர் மரணம் - பன்னிருவர் காயம்

(கொழும்பு)

**கொழும்பு-கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பெண் தற்கொலைக்குண்டுதாரி ஒருவர் குண்டொன்றை வெடிக்க வைத்ததில் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் ஒரு பொலிசார் உட்பட நான்கு பேர் பலியாகினர். தற்கொலைக் குண்டுதாரியும் மரணமடைந்தார். இக் குண்டுவெடிப்பில் பெண் பொலிஸ் உட்பட பத்துப் பொலிசாரும், இரண்டு பொதுமக்களும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.**

நேற்று நண்பகல் அளவில் இடம்பெற்ற இச்சம்பவமானது சந்தேகத்தின் பெயரில் ஒரு பெண்ணை இரண்டு பொலிஸ் அதிகாரிகள் சோதனையிட முயன்ற வேளையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லப்பட்டவர்களில் மற்றும் இருவர் ஈ.பி.டி.பி.குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் அறியவருகின்றது. பொலிசார் சோதனையிட முயன்ற வேளையில் இவர்கள் அருகில் இருந்ததாக அறியவருகின்றது.

நேற்று முற்பகல் கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்துகலாசார அமைச்சிற்குள் அமைச்சரைப் பார்க்க இளம்பெண் ஒருவர் பிரவேசிக்க முயன்றபோது அமைச்சரின் பாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை

### - பிரிகேடியர் சுமேத பேரேரா

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் நடந்த இத்தாக்குதலின் பின்னணி என்ன என்பது எமக்குத் தெரியாது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் இதுவெனவே நாங்கள் சந்தேகிக்கின்றோம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமேத பெரேரா கூறியுள்ளார்.

ஆனால், சரியான நோக்கம் என்ன என்பது எம்மால் தற்போது கூற முடியாதுள்ளது.

நாங்கள் கொழும்பின் பாதுகாப்பை அதிகரித்துள்ளோம். கொழும்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கென கொழும்புக் கட்டளைத் தலைமையகம் என்னும் தனியான அமைப்பை வைத்திருக்கின்றோம்.

அவர்கள் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புச் செயற்பாடுகளின் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆனால், நாங்கள் தற்போது சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளோம். வாகனங்களையும், பொதுமக்களையும் சோதனை செய்வதையும் இந்தப் பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கத்தியுடன் பிடிபட்ட நால்வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

வடமராட்சி, கரவெட்டியின் உச்சியம்மன் கோயிலை அண்டிய சூழலில் இராணுவப் பாவனைக் கத்திகளுடன் பதுங்கியிருந்த நான்கு இளைஞர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் அதிகாலை வேளை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரினை கண்டதும் அங்கிருந்து தப்பித்துச் செல்ல முற்பட்டுள்ளனர். இதனையடுத்து பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப் பட்ட இவர்களை சோதனையிட்ட வேளையில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் கூரிய கத்திகளை இவர்கள் பதுக்கிவைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கைது செய்யப்பட்ட இந் நால்வரும் பருத்தித்துறை நீதி மன்றில் ஆயர் செய்யப்பட்டவேளை அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (27)

## கிழக்கில் நிகழும் அண்மைய சம்பவங்களின் எதிரொலியே கொள்ளுப்பிட்டிக் குண்டுவெடிப்பு

### - கூட்டமைப்பு பா.உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

இன்றைய புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுடைய ஆட்சிக் காலத்திலே யுத்தத்தை நோக்கி அரசு சென்றுகொண்டிருப்பதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன கிழக்கு மாகாணத்திலே அரசின் உதவியுடன் இடம்பெறுகின்ற சம்பவங்களின் எதிர் ஒலியாகவே கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்பைக் கருத வேண்டும்.

தமிழ்க் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். நேற்றைய சம்பவம் இன்றைய அரசியலில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

கருணாவின் பெயரில் அரசின் உளவுப்பிரிவினர் மூலம் தாக்குதல் நடத்தியதைப் போன்று இதுவும் ஏதோ ஓர் வகையில் நடைபெற்றிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியவர்கள் மற்றவர்களின் மீது பழிசுமத்துவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லையெனத் தெரிவித்தார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.வின் சமாதான நடைமுறையின் பிரதிபலனே தற்போதைய குண்டு வெடிப்பு

### – மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி முன்னெடுத்துச் சென்ற போலி சமாதான நடைமுறையின் பிரதிபலனையே பொதுமக்கள் அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் பற்றி ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண் கடந்த ஒன்றரை ஆண்டாக கொழும்பில் நடமாடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்லத் திட்டமிட்டமை தெரியவந்துள்ளதென அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

தலைநகரில் தற்கொலைக் குண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பெண் கைது

கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பெண்ணுடன் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் மற்றொரு பெண்ணை விசேட அதிரடிப்படைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பெண்ணை விசாரணை செய்யும் பொருட்டு, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதாக விசேட அதிரடிப்படைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை–சிலாவத்தைக் காட்டில் எலும்புக் கூடு கண்டெடுப்பு

### - அடையாளம் காணவுதவுமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

சிலாவத்தை-முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் இறந்தவரின் எலும்புக் கூடு உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிலாவத்தை 3ஆம் கட்டை தியோநகர் காட்டுப்பகுதியில் இறந்தவரின் எலும்புக்கூடு முல்லைத்தீவு காவல் பணிமனையினரால் மீட்கப்பட்டுள்ளது. இறந்தவர் நீல நிற காற்சட்டை (ஜீன்ஸ்), மண்ணிற நீளக்கை சேட்டும் எலும்புக் கூட்டுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. யாராவது இவருடைய அடையாளங்களுடன் காணாமல் போயிருந்தால் முல்லைத்தீவு காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (20)

## குண்டு வெடிப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை மீறுவதாககூற முடியாதுள்ளது

### ~ போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய குண்டு வெடிப்புச் சம்பவம் பாரதூரமான ஒன்றென போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுவதாக அமைந்துள்ளதா என்பதை இன்னும் கூறமுடியாதுள்ளதென அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பாக எமது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரியான வீசா பின்போசா தெரிவிக்கையில்:-

இந்தத் தாக்குதல் மிகத் தீவிரமான போர்நிறுத்த மீறல் எனக் கூற முடியாது. சிறிலங்கா அரசும் எம்முடன் தொடர்பு கொண்டுள்ளது. நாங்கள் இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் தொடர்புகொள்ள முயற்சித்து வருகிறோம். ஆனால் தொடர்பு கிடைக்கவில்லை. சிறிலங்கா தரப்பில் அவர்களது பொலிசார் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு வருகிறார்கள் என்றார்.

## கருணாவை இணைத்துக் கொண்டு யுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை

### - இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணாவிற்கும், இராணுவத்திற்குமிடையே எவ்வகையிலும் தொடர்பு எதுவும் இல்லையென புதிய இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார்.

தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ணவை நேற்றுச் சந்தித்த வேளை, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் கருணாவிற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. யுத்தம் ஒன்று ஆரம்பிக்குமானால், எமது இராணுவத்தினரே ஈடுபடுவர். மற்றையவர்களை இணைத்துக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அப்படி யுத்தம் மேற்கொள்ள இயலாதென தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம்

சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டுவதற்கும்; சிறந்த முறையில் தயாரான சாதாரண பற்களைக் கட்டுவதற்கும், மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் "கிளிப்" போடுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்; வேந்தன் பல்கட்டும் நிலையம் மத்திய கல்லூரி மைதானம் முன்பாக, ஏ-9 சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.(சி- 9837)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத் தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி, (றெட்லேடி) போன்ற பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (சி-9895)

### தவறிவிட்டது

கடந்த 01.07.2004 அன்று கரும்புலி நாளுக்கான அறிவிப்புக்காக பயன்படுத்திய திரு.இ.பாலசுப்பிரமணியம் என்பவருடைய முச்சக்கர வண்டி (ஆட்டோ) மேலதிகமான சில்லு (எக்ஸ்ராவீல்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கடற்புலிகளின் அரசியல்துறையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4662)

## சுகாதார அமைச்சின் அனுமதியின்றி மருந்துப் பொருள் விளம்பரம் செய்ய முடியாது

இலங்கையில் சுகாதார அமைச்சின் அனுமதியின்றி மருந்துப் பொருட்கள் விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என கடுமை யான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மருந்து வகைகள் அல்லது அதனோடு தொர்புபட்ட விடயங்கள் தொடர்பில் விளம்பரப்படுத்தல் முயற்சிகளுக்கு அனுமதியைப் பெறும் போது சில வரையறைகளை சுகாதார அமைச்சு வழங்கவுள்ளது. அந்த வரையறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வழிபாட்டுத்தலங்கள் மூலம் மீள்குடியேற்றத்தைஊக்குவிப்போம்

வெள்ளிக்கிழமைகள் தோறும் விரத வழிபாடுகள் மூலம் நிலையான அமைதி வேண்டி பிரார்த்திப்போம். இந்து சமய அரச ஊழியர் கள் இணையம். (4775)

### இந்துநாகரிகம்

2005,2006 A/L மாணவர்களுக்கான வகுப்புக்கள் 08.07.2004 (வியாழன்) 4.00P.M மணிக்கு ஆரம்பம். இடம்-கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. (4632)

### காணி விற்பனைக்கு

காணி விற்பனைக்கு உண்டு. மாங்குளம், துணுக்காய் வீதியில் வன்னிவிளாங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மையில் 10 ஏக்கர் காணி பெரிய கிணற்றுடன் நெற்செய்கைக்கு ஏற்ற குளத்து நீர்ப்பாசனக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சி.சத்தியமூர்த்தி, சத்தியவாசா ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (4128)

### தவறிவிட்டது

சலமன் சிவஞானம் என்பவரின் தே.அ.அ.673092357v, உத்தியோக அட்டையும் 03.07.2004 முறிகண்டிக்கும் அக்கராயன் குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்: ச.சிவஞானம். (4780)

## விசாரணை

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடமாக பாடசாலைக்கு சமுகமளிக்காத சுமார் முந்நூறிக்கும் மேற்பட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்...



பிறப்பு 26-09-1960

வீரச்சாவு 08-07-2003

## லெப். கேணல் நிர்மலன்

(சிறப்புப்படையணி)

## சிவானந்தன் நிர்மலராஜ்

இன்று மதியம் எமது இல்லத்தில்
நினைவு நிகழ்வு நடைபெற இருப்பதால்
போராளிகள், நண்பர்கள்,
உறவினர்கள் அனைவரையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

முல்லைத்தீவு வீதி,
முரசுமோட்டை.

### பாசக் காற்றும் தேசத் தீயும்

உங்கள் பாசமழை நனைக்காத
பயிர்களாக வளர்கிறோம்.
மடி தூக்கிக் கொஞ்சாத
நாட்கள் உறுத்துகின்றன
இந்தப் பிஞ்சு நெஞ்சங்களை -உம்
அன்புக் காற்று வீசாத
பாலைவனமாயிற்று எம் வசந்தகாலம்
உள்ளே தீயைச் சுமந்து கொண்டு
புன்னகையுடன் உலா வந்தீர்கள்
இன்று புன்னகையிழந்து
தவிக்கிறது எம் முற்றம்
புயல் வீசி ஈடாடிப்போனது
எம் மகிழ்வுச் சோலை
'அப்பா' என்ற
அன்பான உள்ளம்
எங்கே போனது எம்மைவிட்டு
பகை வாசல் எங்கும் படர்ந்து
கிடந்ததாம் உம் பாதச்சுவடு
சங்கர் மாமாவின் கனவுடன்
தலைவர் மாமா வழியில்
தேசக்கடமை சுமந்து சென்றீர்
எம் நேச முகம் மறந்து
உயிர் வலியைச் சுமந்தாலும்
ஆறுகின்றோம்.
விடுதலைக்கே உரமாகிப்போனது
உங்கள் உயிர் என்று
சுதந்திரக் கடலிற்
கரைந்தது உங்கள் உயிர் என்று
எமக்கான மகிழ்வுச் சூரியன்
உங்கள் புன்னகையோடு வருவான்
ஒருநாள்.

நிர்மலன்
குடும்பத்தினர்.

# தீவிரவாதிகள் நடத்திய பதுங்கித் தாக்குதலில் பாக்தாத்தில் நான்கு அமெரிக்கக் கடற்படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் மேற்கு பாக்கதாத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் நான்கு அமெரிக்கக் கடற்ப்டையினர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டுள்ளனர்.

ஷன்னி முஸ்லிம்கள் செறிந்து வாழும் மேற்கு பாக்தாத்தில் கிளர்ச்சியாளர்கள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க இராணுவதரப்போ நான்கு கடற்படை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளது. ஆனால் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதற்கு காரணம் சொல்ல மறுத்துவிட்டது.

அல் அன்பர் மாகாணம், பலூஜா, ரமாணி பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அமெரிக்க படையினர் ஈடுபட்டிருந்த வேளையே ஆயுததாரிகள் மறைந்திருந்து தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

# எய்ட்ஸ் நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்தும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது

## ஐ.நா.எய்ட்ஸ் பாதுகாப்பகம் கவலை

எய்ட்ஸ் நோயினை குறைப்பதற்கு நடவடிக்கைகளும், மருந்துகளும் அறிமுகப்படுத்தியுள்ள போதிலும், எய்ட்ஸ் குறையவில்லை. மாறாக நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு ஐ.நா.சபையின் எய்ட்ஸ் பாதுகாப்பகம் கவலை வெளியிட்டுள்ளது. ஐ.நா.சபை எய்ட்ஸ் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் 2003 ஆம் ஆண்டில் மட்டும் 48 கோடி மக்கள் உலகம் பூரவும் எயிட்ஸினால் பீடிக்கப்பட்டுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.



பறவைக் காய்ச்சலினால் கோழிகள் இறந்து வரும் மத்திய தாய்லாந் பண்ணையொன்றில்– ஒரு முட்டை வியாபாரி

# தென்கிழக்கு ஆசியாவில் 24 பேரைப் பலிகொண்ட “பறவை நோய் வைரஸ்” மீண்டும் அச்சுறுத்தல்

(பாங்கொக்)

**தாய்லாந்திலும் சீனாவிலும் மீண்டும் பறவை நோய் வைரஸ் பரவியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை தமது நாட்டில் பறவை நோய் ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ள இருநாடுகளும், பறவைநோய் பரவல் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறியுள்ளன.**

இவ்வருட ஆரம்பத்தில் இந்நோயினால் தென்கிழக்காசியாவில் 24 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்கொங்கில் 1997 இல் இனங்காணப்பட்ட F-5-1 என்று இனம் காணப்பட்ட பறவைத் தொற்றே தற்போது தாய்லாந்தில் பரவியுள்ளது. பாங்கொக்கிற்கு அருகேயுள்ள இரண்டு பண்ணைகளில் இத்தொற்று ஏற்பட்டுள்ளதாக தாய்லாந்து கூறுகின்றது.

சீனா மத்திய ஜங்கிறீற் மாகாணத்தில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றது.

எனினும் நோயின் தாக்கம் பரவாது கட்டுப்பாட்டில் இருப்பதாக இருநாடுகளும் கூறியுள்ளன.

## 646 அமெரிக்கப் படையினர் பலி

ஈராக் போரில் இதுவரை 646அமெரிக்கப் படையினர் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இந்த தகவலை பென்டகன் நேற்று வெளியிட்டுள்ளது. ஈராக் போர் முடிந்து விட்டது என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்ததிலிருந்து கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே இது என்பது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிய நீதிமன்றத்திற்கு எதிராக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றில் வெளியேற்றப்பட்ட தனது தலைவர் சதாம் ஹுசைனின் ஓவியம் ஒன்றைத் தூக்கி வரும் ஈராக்கிய இளைஞன்.

# இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் மீது தற்கொலைத் தாக்குதல்; ஈராக்கில் 15பேர் பலி

ஈராக்கில் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் மீது தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 15பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். 30 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் வடக்குப் பகுதியிலுள்ள அல்-ஹஸிர் எனுமிடத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு ஈராக்கியர்களது உடல்களுக்கு எரியூட்டும் சடங்கு நேற்று முன்தினம் நடந்த வேளை, வேகமாகவந்த கார்க்குண்டு தீவிரவாதி ஈராக்கிய மக்களை ஊடுருவி காரை வெடிக்கச் செய்துள்ளார். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களில் 15பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். ஈராக்கின் நிர்வாகத்தை அமெரிக்க இடைக்கால அரசிடம் ஒப்படைத்துள்ளதைக் கண்டித்தே இந்தத்தாக்குதல் நடத்துப்பட்டதாகக் கூறப்படுகிறது.



பாக்தாத்தின் வடக்கே அல்–காலிஸில் மரண வீட்டில் கூடியிருந்தோரிடையே தற்கொலைக்கார்க் குண்டு வெடிப்பு ஒன்று இடம் பெற்றதை அடுத்து உள்ஙூர் வாசியொருவரை அமெரிக்கப்படையினர் விசாரணை செய்கின்றனர். இக்குண்டுவெடிப்பில் ஆறுபேர் கொல்லப்பட்டும் 35 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

## ஒப்புக் கொள்கிறார் ரொனிபிளேயர்

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் கண்டு பிடிக்கப்படும் வாய்ப்பு இனி இல்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் நேற்று முன்தினம் ஒப்புக் கொண்டுள்ளார்.

பேரழிவு ஆயுதங்களைச் சதாம் ஹுசைன் முன்பு வைத்திருந்தார் என்பதும் உலகறிந்ததே. ஆனால் தேடுதலில் அவை கிடைக்கவில்லை என்று லண்டனில் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே அவர் கூறியுள்ளார்.

# நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் தாக்குதல்; பதினொரு நேபாள இராணுவத்தினர் பலி

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் செல்லின் மாவட்ட வனப்பிரதேசத்தில் இராணுவத்தினர் ஆற்றைக் கடந்து செல்லுகையில் மறைந்திருந்த மாவோயிட்டுகள் இராணுவத்தினர் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இந்த மாவட்டமே மாவோயிட்டுக்களின் முக்கியமான பிரதேசமாக இருக்கின்றது. என்றும் இராணுவம் கூறியுள்ளது.

மாவோயிஸ்டுக்கும், நேபாள இராணுவத்திற்கும் நடந்து வரும் சண்டையில் இதுவரை 10ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

அத்துடன் நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்ப்பவர்கள் மாவோயிஸ்டுக்கள் இரண்டுமுறை மன்னராட்சியை கவிழ்க்க சதி செய்த போதும் அது செயற்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

# மிலோசபிக்கிற்கு எதிரான வழக்கு விசாரணை சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது

யூகோசெலாவியாவின் முன்னாள் சனாதிபதி செபோடொன் மிலோசபிக்கிற்கு எதிரான யுத்த மற்க்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஓரிரு தினங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

கேக்கில் அமைந்துள்ள விசாரணை நீதிமன்றத்திலேயே இவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

மிலோசபிக்கிற்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வாதங்களை முன்வைப்பதாக இருந்தது. ஆனால் உடல் நிலை சரியில்லை என்று அவர் நீதி மன்றில் ஆஜராக முடியவில்லையென்று அவரது வழக்கறிஞர் நேற்று முன்தினம் கூறியுள்ளார். இதனையடுத்தே வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. 62 வயதான மிலோசபிக்கிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பமாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

# கியூபாவில் கடும் வரட்சி

கியூபாவில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனை சமாளிக்க முடியாமல் கியூபா அரசு திணறி வருகின்றது. இதனால் உலக நாடுகளின் உதவிகளை கியூபா கோரியுள்ளது.

கடந்த 40 வருடங்களில் இல்லாத அளவு கடும் வரட்சி தற்போது ஏற்பட்டுள்ளது. வழக்கமாகப் பெய்யும் மழை பெய்யத் தவறியதால் ஆறுகள், குளங்கள் வற்றிவிட்டன.

இதனால் பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. பால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.



வடக்கு பாங்கொக்கில் இருந்து 80KM அப்பாலுள்ள அயுத்தயா கிராமத்தில் உள்ள ஒரு பண்ணையில் கோழி ஒன்று நீர் குடிக்கின்றது.

# சிறார்களின் எதிர்கால நலன்கருதி கிளிநொச்சியில் பயிற்சிப் பட்டறை

## -யுனிசெப் உதவியுடன் நடவடிக்கை

**சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.**

கடந்த 16 ஆம்,17ஆம் திகதிகளில் அ.சா.நிறுவனங்களின் பணியாளர்கள் 30 பேருக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலும், 22ஆம், 23ஆம் திகதிகளில் பாரதிபுரம், கணேசபுரம், திருநகர், செல்வாநகர் ஆகியகிராமங்களிலிருந்து மாதர்சங்கம், கிராமஅபிவிருத்தி சங்கக்குழுக்களின் அங்கத்தவர்கள் 30 பேருக்கு பாரதிபுரம் பொதுமண்டபத்திலும், 26ஆம், 27ஆம் திகதிகளில் கிளிநொச்சிப் பிரதேச பாட



சாலைகளிலுள்ள 30 ஆசிரியர்களுக்கும் அ.சா. நிறுவனங்களின் இணையத்தில் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

பயிற்சியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் நலன் திட்ட உத்தியோகத்தர்கள் மதனமோகன், ஜெயக்குமார், மோகன்ராஜ் ஆகியோர் சிறுவர்களின் நலன், அவர்களின் உரிமைகள் சிறுவர் தொடர்பாக ஒவ்வொருவரின் பங்கு, சிறுவர்களின் நடத்தையில் செல்வாக்குச்செலுத்தும்காரணிகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி பயிற்சியினை வழங்கியதுடன் ஒவ்வொரு பயிற்சியின் நிறைவிலும் பயிற்சியாளர்கள் சிறுநாடக நிகழ்வும் செய்தனர்.

பயிற்சியில் கியூடெக் நிறுவன இயக்குனர் பயிற்சியின் முக்கியத்துவம், சிறுவர்களின் நலன் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்ததுடன் பெ.அ.பு.நிறுவன முதன்மைச் செயலக திட்ட இணைப்பாளர் திருமதி. கமலாம்பிகை சிறுவர்உரிமைகளும், பெற்றோரின் பங்களிப்பும் எனும் விடயத்தில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இப் பயிற்சியில் யுனிசெப் பிரதிநிதியும், பாரதிபுரம் கிராமஅலுவலரும், பாரதிபுரம் ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்புமாறனும் கலந்து கொண்டதுடன் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுநிறுவன இணைப்பாளர் மா.செல்வி பயிற்சி தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன் பயிற்சிகள் நிறைவு பெற்றன.

### புனரமைக்கக் கோரல்

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியிலிருந்து இரணைமடுக் குளத்திற்குச் செல்லும் 500 மீற்றர் நீளமான வீதிநீண்டகாலமாக திருத்தப்படாது கற்கள் நிறைந்து காணப்படுகிறது. இதனால் இவ் வீதியால் பயணம் செய்யும் மக்கள் பலத்த கஸ்ரங்களை எதிர்நோக்கிவருவதை அவதானிக்க முடிகிறது. (15)

# குப்பிவிளக்கு வெடித்ததில் வீடு முற்றாக எரிந்தது!

## —3 வயதுக் குழந்தை அயலவரால் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் கடந்த ஞாயிறு இரவு ஒருவீட்டில் குப்பிவிளக்கு வெடித்ததில் வீடு முற்றாக எரிந்து அழிந்தது.

வந்தாறுமூலைகொலனியிலுள்ள ராசன் என்பவரின் வீடே இவ்வாறு எரிந்துள்ளது. வீட்டில் கணவனும், மனைவியும் இருக்கவில்லை. இச்சமயம் வீட்டில் மூன்றுவயதுக் குழந்தை மட்டுமே இருந்துள்ளது. மேற்படிக் குழந்தை விளக்கை எடுத்து விளையாடிய போதே விளக்கு வெடித்துச்சிதறியதாகவும் பின்னர், அயலவர்களின் முயற்சியினால் குழந்தை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்க் கலைத்திறன் போட்டிகள் யூலை–18இல் நடைபெற ஏற்பாடு

(கிளிநொச்சி)

ஆண்டு தோறும் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தால் நடாத்தப்பெறும் நாவன்மை, குறள் இசை, நாட்டுப்புறக்கலை (ஊரக ஆடல்), நாடகம், நொடிவினா விடைப் போட்டிகள் 2004-07-18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபங்களில் நடைபெறும். இப் போட்டிகளுக்கான வேண்டுகைகளை அனுப்பிய மாணவர்களையும், பள்ளிகளையும் உரிய நேரத்திற்குசமுகமளிக்குமாறு தமிழ்ச்சங்க செயலாளர் வே.பரமநாதபிள்ளை கேட்டுள்ளார்.

# மு/ ஆனந்தபுரம் அ.த.க.பா.இற்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

முல்லைத்தீவு ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை நீண்டகாலமாக பல்வேறு அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாமல் இயங்கி வருகின்றது. இதனால் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாகி வருவதாகப் பாடசாலை அதிபர் எஸ்.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இப்பாடசாலை நீண்டகாலமாக ஒரே ஒரு நிரந்தரக் கட்டடத்துடனும் தற்காலிகக் கொட்டகைகளுடனும் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

மேலும் கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைகளுடன், இருக்கும் ஆசிரியைகளுள் இருவர் பிரசவலீவில் நின்றுள்ளதால் மேலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு ஸ்தம்பிதம் அடைகிறது. மாணவர் வரவும் குறைகிறதென பாடசாலைஅதிபர் கவலை தெரிவித்துள்ளார்.

# மக்கள் பாவனையிலுள்ள வீதிகள் அனைத்தையும் திருத்த நடவடிக்கை

## -புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் தகவல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மக்கள் பாவனையில் உள்ள அனைத்து வீதிகளும் திருத்தம் செய்யப்படவுள்ளனவென உதவி அரச அதிபர் தயானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் வன்னிப்புனர்வாழ்விற்குத்துணை புரியும் அமைச்சின் நிதியிலும், பிரதேச சபையின் நிதியிலும் புதுக்குடியிருப்பில்இரு வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு துர்க்கா வீதியும், புதுக்குடியிருப்பு திலீபன் வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளன. திலீபன் வீதியில் நீர்வழிந்து ஓடுவதற்காக வீதியின் இருமருங்கும் நீர்வடிகால் மற்றும் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. துர்க்கா வீதியில் பழுதடைந்துள்ள பாலம் திருத்தப்பட்டுள்ளதென உதவிஅரசாங்க அதிபர் தெரிவித்தார். (20)



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிரதேச காஞ்சிரம்குடா கிராமத்தில் உதவிகள் எதுவுமின்றி தாமே குடிசைகள் அமைத்து மக்கள் மீள் குடியமர்ந்து வருகின்றனர் அத்தகைய குடிசையொன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

# 'சென்ஜோன்ஸ்' முதலுதவிப் படைப்பிரிவிற்கான 2ஆம் கட்ட சமூகநலப் பயிற்சிநெறி நிறைவு

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதியுதவியில் நடாத்தப்படும் சமூகநலப் பயிற்சி நெறியின் 2ஆம் கட்டம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடாத்தும் அடிப்படையில் கடந்த 3,4 ஆகிய இரு நாட்களிலும் கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பிரதேசத்தில், வேரவில் இந்து மகாவித்தியாலயம், ஜெயபுரம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50இற்கு மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்துகொண்டனர்.. மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்புத் தொழிற்பாடு, முதலுதவிச் செய்முறைகள், தொற்றுநோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள், சென்ஜோன்ஸ், அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

இப்பயிற்சி நெயிறில் முதலுதவி தொடர்பான கைந்நூல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால்தயாரிக்கப்பட்டுபயிற்சி நெறியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. மேலும் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு பாடசாலையிலும் பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டதோடு பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்குகளும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது. முதற்கட்ட சமூகநலப் பயிற்சிநெறி கடந்த மாதம் இடம் பெற்றமை தெரிந்ததே.

### ஜே.ஆர் கைக்குண்டு குளத்தில் கண்டுபிடிப்பு

நெடுங்கேணிப்பாடசாலைக்கு அருகில் உள்ள குளத்தில் ஜே.ஆர் ரக கைக்குண்டு புதைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதை மீன்பிடிக்கச்சென்றவர்கள் கண்டு உடனடியாக போராளிகளிடம் கூறியதை அடுத்து நேரடியாக அவர்கள்சென்று பார்வையிட்டனர் பின் மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் பிரிவினருக்குத்தெரியப்படுத்தினர்.

### வேலைவாய்ப்பு

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவ அழுத்தம் காரணமாக உப்பளத்தை விட்டு வெளியேறி தற்சமயம் வேலைவாய்ப்புக்களற்றிருக்கும் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பள ஊழியர்களுக்கு ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் வேலைவாய்ப்பளிக்க முன்வந்துள்ளது,எனவே வேலைவாய்ப்பினைப்பெறவிரும்புவோர் எதிர்வரும்15ஆம் நாள் சனிக்கிழமைக்கு முன்னதாக சமுகம் கொடுக்குமாறு உற்பத்தி முகாமையாளர் கேட்டுக் கொள்கின்றார்.

# முல்லை நகரில் மக்கள் வங்கி ஆகஸ்ட் மாதம் முதல் இயங்கும்

(முல்லை)

முல்லைத்தீவு நகரில் மக்கள் வங்கிக்கிளை நிரந்தரமாக இயங்கத் தீர்மானித்துள்ளது.

மக்கள்வங்கி முல்லை நகரில் இயங்க கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது கட்டடத்தொகுதியை வழங்க முன்வந்திருந்தமை தெரிந்ததே.

தற்போது இக் கட்டடத்தில் மக்கள் வங்கிக்கிளையை செயற்பட வைக்க கிளை முகாமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கமைய புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக இயங்கி வந்த மக்கள் வங்கிக்கிளை அடுத்த மாத முற்பகுதியில் முல்லை. நகரில் இயங்குமென முல்லைநகரப் புனரமைப்புக் குழுத்தலைவர் தெரிவித்தார். (20)

### அறிவுறுத்தல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் சனிக்கிழமைகளில் மதியம் 1.30மணிவரை திறக்கலாமெனவும் ஞாயிற்றுக் கிழமைகளில் முழுமையாக நிலையங்கள் மூடப்படவேண்டுமெனவும் அத்தியாவசிய தேவைகருதி மருந்தகங்கள், திருத்தகங்கள், தேநீர்ச்சாலைகள் என்பன திறந்திருக்கலாமெனவும் முள்ளியவளைப்பிரதேச வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. (ஆ)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு பாண்டியன் சுவையூற்று அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கிளிநொச்சி பாண்டியன் சுவையூற்று நிறுவனத்தினர் அன்பளிப்பாக தொலைக்காட்சி உபகரணங்களை கடந்த 04 ஆம் திகதி கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஊடாக வழங்கியுள்ளனர்.வைத்தியசாலையின் விடுதி மூன்றிற்கு நோயாளர் மற்றும் பொழுது போக்கு போன்றவற்றிற்காக தொலைக்காட்சி, டெக், CD டெக் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனரென்று வைத்திய கலாநிதி யூடி ரமேஸ்குமார் தெரிவித்துள்ளார். அத்தோடு சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு குளிர் சாதனப்பெட்டி ஒன்றை திருமதி.சின்னப்பா குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனரென்றும் அவர் தெரிவித்தார்.வைத்திய சாலைக்குத் தேவையான இது போன்ற அன்பளிப்புப் பொருட்களை மக்களே தருவதன் மூலம் வைத்தியசாலையின் தேவைகள் சிலவற்றை பூர்த்திசெய்வதுடன் நோயாளர்களின் தேவைகளும்பூர்த்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

# மீன்பிடிப் படகுகளில் வெளிச்சமின்மையே விபத்துக்கள் இடம்பெற பிரதான காரணம்

## சிறிலங்கா கடற்படை வட்டாரம் தகவல்

**வடமராட்சிக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் மீன்பிடிப்படகுகளில் போதிய வெளிச்ச வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் தொடர்ந்தும் விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக சிறிலங்கா கடற்படை வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.**

பல தடவைகள் இது தொடர்பாக மீனவ சங்கங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீனவர்கள் இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்தும் அக்கறையற்றிருப்பதாக திருமலையிலுள்ள கடற்படை தலைமையக வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக நள்ளிரவு வேலைகளில் எந்தவொரு வெளிச்ச அடையாளமும் இன்றி இம்மீன்பிடிப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதாகவும், அத்துடன் மீனவர்கள் அப்படகுகளில் உறங்கிவிடுவதாலேயே இவ்விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேகமாக ரோந்து செல்லும் தமது ரோந்துப்படகுகளினது "ராடர்"களில் இம்மீன்பிடிப்படகுகளது நடமாட்டம் சில வேளைகளில் காணமுடியாதிருப்பதால், விபத்துக்களை தடுத்து நிறுத்த முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த திங்கள் அதிகாலை கடற்படையின் "டோறா" படகால் மோதப்பட்டு மீன்பிடிப்படகொன்று சேதமடைந்துள்ளது. தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் இவ்வாறான விபத்துக்களால் அண்மைக்காலங்களில் இதுவரை மூன்று மீனவர்உயிரிழந்திருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சரசாலை வடக்கு கோணாவளை குறிச்சிக்கு பாதை அமைக்க பிரதேச செயலகம் முடிவு

சரசாலை வடக்கு கோணாவளை குறிச்சி கடந்த இருபது வருடங்கள் பாதையின்றி வாழ்ந்துவரும் இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகள் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் மூலம் இப்பகுதிக்கு பாதை அமைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு.சரவணபவா மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் திரு.சிறினிவாசன், பிரதேசசபை செயலாளர் திரு.பாலச்சந்திரன், கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் சபாநாயகம், இப்பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர், திரு.உபேந்திரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சமுர்த்தி அலுவலர், வணிகர் மன்றத் தலைவர் திரு.அருளானந்தம் மற்றும் கோணாவளைக் குறிச்சிக் கிராமபொதுமக்கள் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இப்பகுதியில் உள்ள சில தனியார் வயல் நிலங்கள் ஊடாகப் பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக வயல் சொந்தக்காரர்களிடம் இருந்து இனாமாகவும் நஷ்ட ஈடுகோரும் பட்சத்தில் அதற்கான பணத்தை இப்பகுதியில் குடியிருக்கும் மக்களிடம் இருந்து பெற்று வழங்குவதென முடிவு எடுக்கப்பட்டது. பாதை அமைப்பதற்கான பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ளப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### கிணற்றில் வீழ்ந்து வயோதிபப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் தவறி வீழ்ந்த வயோதிபப் பெண் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

சண்டிலிப்பாய் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுந்தரம்பிள்ளை லக்ஷ்சுமி (வயது -64) என்பவரே மரணமானவராவார்.

நீர் அள்ளுவதற்காகக் கிணற்றடிக்குச் சென்றவேளை, கிணற்றினுள் தவறி வீழ்ந்து இவர் மரணமடைந்தார்.

# சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டனர் கடந்த ஆறு மாதத்தில் 12 ஆயிரம் பேர் கைது

கடந்த ஆறு மாதங்களில் சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பாக சுமார் 12ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் கொழும்பில் பிரதி பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் கூறியுள்ளார்.

அத்துடன் கொழும்பு நகரில் குற்றச் செயல்களும், போதைப் பாவனையும் அதிகரித்துச் செல்வதாக கூறிய அவர் இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும், போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வு அளித்து வாழவைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமனம் சட்டத்துக்கு முரணானது-திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமனம் செய்யப்பட்டது சட்டத்திற்கு முரணானது என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

செங்கடகலவில் நடைபெற்ற கட்சியின் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமானது பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதில் மட்டுமல்லாது மகிந்த ராஜபக்ஷ மக்களால் விரும்பப்படும் பிரதமமந்திரி என்பதை நிரூபிப்பதிலும் தோல்வி கண்டுள்ளது.

முன்னணி அரசும் அதன் பிரதமர் நியமனமும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையைக் காட்ட முடியாது உள்ளது.

113ஆசனங்கள் தேவையான விடத்து 106ஆசனங்களை மட்டுமே அது கொண்டுள்ளது. மேலும் 07ஆசனங்களை அது பெறமுடியாதுள்ள நிலையில் எதிர்க்கட்சி 116உறுப்பினர்களின் கையெழுத்துடன் கடிதமொன்றை வழங்கியுள்ளது.

தனது நியமனம் சட்ட விரோதமானது என்பதற்கிணங்க பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# சிறைச்சாலை நிர்வாக முறைகளை மறுசீரமைக்க விசேட குழு நியமனம்

(கொழும்பு)

சிறைச்சாலை நிர்வாக முறைகளை மறுசீரமைக்கும் நோக்கில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு சிறைச்சாலை உயரதிகாரிகள் பற்றாக்குறை, பதவியில் இணைப்பு, பதவி உயர்வு, ஊழியர் நலன் ஆகிய தொடர்பான நிலைமை குறித்து அறிக்கை தயாரிக்கும் நிதியமைச்சின் மேலதிக செயலர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் ஏழு பேர் அடங்குவர்.

சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளுக்கும் அமைச்சர் டி.யு. ஜெயசேனரட்ணவுக்கும் இடையே நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலின் பின்னரே இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று நீதிம்ற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சு கூறியுள்ளது.

# சிறிலங்கா விமானப்படைக்கு புதிய கிபீர் விமானம் கொள்வனவு

சிறிலங்கா விமானப்படைக்கு புதிதாகக் கிபீர் போர் விமானமொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த விமானம் தங்களுக்குக் கிடைத்துள்ளதாக விமானப்படைத் தளபதி எயாமார்ஷல் டொனால்ட் பெரேரா கூறியுள்ளார்.

பயிற்சி மற்றும் சோதனை நடவடிக்கைகளில் இந்த விமானம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விமானப்படைக்கு மேலும் ஒரு கிபீர் விமானம் தேவைப்படுவதாக விமானப்படைத் தளபதி கூறியுள்ளார்.

## போலிக்கச்சேரியை இயக்கிய

# குற்றச்சாட்டில் கைதானவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் போலிக்கச்சேரியொன்றினை இயக்கி வந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களில் ஒருவரை பிணையில் செல்ல யாழ்.மாவட்ட நீதவான் நேற்று அனுமதியளித்துள்ளார். போலி இறப்பர் முத்திரைகளைத் தயாரித்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்தவரான தில்லையம்பலம் செல்வராசா என்பவரையே பிணையில் செல்ல நீதவான் அனுமதியளித்துள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தவேளை முதலாவது சந்தேக நபரான யாழ்.செயலகப் பணியாளரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை இரண்டாவது சந்தேகநபரான தில்லையம்பலம் செல்வராசாவினை 29 ஆயிரம் ரூபா பெறுமதியான காசுப்பிணை மற்றும் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான அரசஊழியரொருவரது ஆட்பிணையில் செல்ல நீதவான் அனுமதி அளித்துள்ளார். (27)

# சூழல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆகாயத் தாமரை ஆரியகுளத்தில் அதிகரிப்பு

யாழ்.நகர்ப்பகுதியில் உள்ள ஆரியகுளத்தினுள் ஆகாயத் தாமரை எனும் செடியின் பரம்பல் அதிகரித்திருக்கிறது.

சூழல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும், நோய்களைப் பரப்புவதற்கான நுளம்புகளின் பெருக்கத்தை ஊக்குவிக்கக் கூடியதுமான இச்செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்த யாழ்.மாநகர சபை உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதுகுறித்த அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## - நயினாதீவுக்குச் சென்ற -

# ஆனைக்கோட்டைவாசியை காணவில்லையென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி ஆலயத்திற்கு சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவரான வினாசித்தம்பி இராமலிங்கம் வயது 57 என்பவரே காணாமல் போயுள்ளார். கடந்த 4ஆம திகதியன்று குடும்பத்தவருடன் நயினாதீவு சென்றிருந்த இவர் பின்னர் காணாமல் போயிருப்பதாக அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(27)

# மீட்கப்பட்ட வெடிபொருட்கள் விற்பனை செய்யப்பட்டதா?

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி அகற்றும் போது பெறப்படும் வெடிபொருட்கள் இரகசியமாகப் பல வெளி நபர்களுக்கு விற்கப்பட்டதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டு வரும் நிறுவனமான 'ஹலோ ரஸ்ற்' மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ள ஆறு நபர்களின் மூலமே இத்தகவல் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆறு தொழிலாளர்களும் வெடிபொருட்களை வெளியாருக்கு இரகசியமாக விற்பனை செய்த குற்றத்திற்காக 'ஹலோ ரஸ்ற்' நிறுவனத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் என்றும் யாழ்.பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் பெண் உட்பட அறுவர் படுகாயம்

## அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவில் சம்பவம்

(கொழும்பு)

கைக்குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி ஆறுபேர் படுகாயமடைந்த சம்பவம் சிறிலங்காவின் அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. சென்ற திங்கள் இரவு இரண்டு தரப்பினருக்குமிடையே ஏற்பட்ட தர்க்கத்தை அடுத்து ஒரு வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டதாகவும் இதன்போது வீட்டிலிருந்த ஒரு பெண் உட்பட ஆறு பேர் படுகாயம் அடைந்ததாகவும், வீட்டின் சொந்தக்காரரை வாளால் வெட்டிய பின்னரே இக்குண்டுவீச்சு இடம்பெற்றதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இச் சம்பவத்தில் படுகாயம் அடைந்தோர் மாத்தறை அக்குரஸ்ஸ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பத்திரிகையாளர் றிச்சட்டி சொய்ஸா கொலைதொடர்பான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பத்திரிகையாளர் றிச்சர்ட்டி சொய்ஸ்ஸாவின் கொலை தொடர்பான விசாரணை வரும் செப்டம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படடுள்ளது .

சென்ற திங்கள் கொழும்பு உயர் நீதிமன்றத்திலேயே இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது, 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி றிச்சர்ட்டி சொய்ஸா ராஜகிரியவில் கடத்திச் செல்லப்பட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை மிருசுவில் படுகொலை வழக்கு இந்த மாதத்திற்குள் அதே நீதிமன்றில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதான முயற்சிகளில் அரசு பின்னடிப்பு பெரும் நெருக்கடிகளுக்கே வழிவகுக்கும்

விடுதலைப்புலிகள் வடகிழக்கிற்கு சமஷ்டி ஆட்சிமுறையையும், அதற்கான பல சட்டதிட்டங்களையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க இருக்கின்றனர். இது சம்பந்தமாகப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன. சில அரசியல்வாதிகள் புலிகளின் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், அதை நிராகரிக்கப் போவதாகவும் தற்பொழுது பகிரங்கமாக அறிவித்துள்ளனர். இதனால் இலங்கை நாடு இரண்டாகப் பிளவுபடும் என பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வகையில் 20 வருட யுத்தத்தின் பிரதிபலனாக சமஷ்டி ஆட்சிமுறை இந்நாட்டிற்குப் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடிக்கடி இந்த நாட்டில் ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டபடியால் சரியானதொரு தீர்வு காண முடியாமல் போயிற்று. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. இந்த எதிர்ப்புகளில் எந்த அர்த்தமும் கிடையாது. இந்த எதிர்ப்பால் மீண்டும் இப்பிரச்சினை பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது.

தமிழ் மக்கள் 1948ஆம் ஆண்டு இப்பிரச்சினைகளுக்குத் தீர்வினை முன்வைத்தனர். இவைகளை நிறைவேற்றுவதற்கு 1958ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் அதை இவர்கள் நழுவவிட்டனர். பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் இதில் அடங்கும். வட- கிழக்கு மாகாணங்களுக்கு உயர் அதிகாரங்கள் கொண்ட இரு சபைகளை நியமித்து அந்த சபைகளின் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்- இது அன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், இன்று இந்த நாட்டில் யுத்தம் ஏற்பட்டிருக்காது. சமஷ்டி ஆட்சிமுறையை விடுதலைப்புலிகள் சமர்ப்பித்திருக்க மாட்டார்கள்.

மற்றையது டட்லி - செல்வா ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இருந்த சந்தர்ப்பங்களும் நிறைவேறாமல் போயிற்று. அன்று தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் இணைந்திருந்தது. அன்று எதிர்க்கட்சியினர் "டட்லிகே படே மசாளவடே" அதாவது டட்லியின் வயிற்றில் மசாலா வடை என்று கூக்குரலிட்டுக் கேலி செய்தனர்.

மற்றது 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு கொண்டுவரும் பொழுது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு இருந்த நல்லதொரு சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டனர். இதனால் விரக்தியடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 1975ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனம் தனித் தமிழ் ராஜ்யத்தை உருவாக்கும் திட்டத்தை முன்வைத்தது. தமிழர்களுக்கு தனிநாடு தேவை என்பதை முதல்முறையாகப் பிரகடனப்படுத்தியது. அன்றைய தமிழரசுக்கட்சியின் தீவிரவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தவர்கள் இருந்த படியால் வட்டுக்கோட்டைப் பிரகடனம் முன்மொழியப்பட்டது. அதைத் தமிழ் மக்கள் அனைவரும் முற்றாக ஏற்றுக்கொண்டனர்.

1978ஆம் ஆண்டில் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான பதில் கிடைக்காத படியால் நாட்டில் சிவில் யுத்தம் ஆரம்பமாகியது. 1994ஆம் ஆண்டு அரசாங்கம் பதவியேற்றபின் முக்கியமான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

1995, 1996, 1997, 2000ஆம் ஆண்டு காலங்களில் முக்கியமான பிரச்சினைகளை எம்மால் இனங்கண்டுகொள்ளமுடிந்தது. ஒரு நாட்டில் அதிகாரப்பரவலாக்கல் என்பது இதில் அடங்கியது. இந்த அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளில் காணிஅபிவிருத்தி, நீதித்துறை, நிதித்துறை, வரிஅறவிடுதல் போன்றவைகளை நாட்டில் தீர்த்து வைப்பதற்கு சமஷ்டி ஆட்சிமுறை சிறந்ததென அன்றைய அரசு அதை ஏற்றுக் கொண்டது.



இப்பொழுது சமஷ்டி ஆட்சிமுறை சம்பந்தமாகப் பல யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளனர். அதற்கு அவர்களின் சட்ட வல்லுனர்கள், ஆலோசகர்களின் அனுசரணையுடன் சர்வதேச ரீதியிலும் பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தியபடியால் இப்பிரச்சினை சர்வதேச சமூகத்தவர்களின் அனுதாபங்களைப் பெற்றுள்ளது.

இதற்கு முன்னதாக விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் ஒஸ்லோ மாநாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டிமுறை சிறந்ததென ஏற்றுக் கொண்டனர். இதில் முக்கிய விடயம் விடுதலைப்புலிகள் ஒரு நாட்டின் இறைமைக்குப் பாதகம் ஏற்படாமல் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டமை நல்ல அம்சமாகும். இதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். தற்பொழுது சமஷ்டி ஆட்சிமுறை அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சனாதிபதிக்கும் எதிர்க்கட்சியினருக்கும் பிரச்சினையாக இருக்கமாட்டாது. சமஷ்டி ஆட்சிமுறையுடன் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சனாதிபதியின் திட்டமாகும். இந்த அணுகுமுறையில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இடமில்லை. சமஷ்டி முறையைப் பற்றிக் கதைக்கும் பொழுது அரசியல் பிரச்சினையின் முக்கிய விடயங்களைப் பற்றிக் கதைப்பது மிக முக்கியமானதாகும். இதைத் தடுக்கமுடியாது. அரசியல் குறைபாடுகளை இதில் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். சமஷ்டி ஆட்சிமுறை சம்பந்தமாக விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் யாவும் ஏற்றுக்கொள்ள முடியாது. கடல் பிராந்தியம் சம்பந்தப்பட்ட யோசனைகள் ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மற்றது சமஷ்டி ஆட்சிக்கும் மத்திய அரசிற்கும் உள்ள தொடர்புகள் இதில் குறிப்பிடவில்லை. வடகிழக்கு முஸ்லிம், சிங்கள மக்கள் சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் யாவும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகளுக்கும் கடற்படைக்கும் இடையில் உள்ள நடைமுறைகள் இதில் குறிப்பிடப்படவில்லை. பேச்சுவார்த்தைகளின் பொழுது முக்கியமாக இது சம்பந்தமாக கலந்தாலோசிப்பது அவசியம்.

இப்பிரச்சினைகள் யாவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பொழுது பேசித்தீர்த்துக்கொள்ள முடியும். பேச்சுவார்த்தைகளின் பொழுது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது கடினம். அரசாங்கத்தின் நிலைப்பாடும், புலிகளின் நிலைப்பாடும், மாறுபட்ட திசையில் சென்றுகொண்டிருப்பதால் முக்கியமான விடயங்களைப் பேசித்தீர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது மிக அவசியமாகும்.

பேச்சுவார்த்தைகள் அர்த்தம் இல்லாமல் நீடித்துக்கொண்டு போனால் தேவை அற்ற பிரச்சினைகளும் இதில் வந்துகொண்டு இருக்கும். போர்நிறுத்தம் சம்பந்தமாக கிழக்கு மாகாணத்தில் இன்று பெரும் பிரச்சினைகள் கிளம்பியுள்ளன. இதுபோர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. போர்நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமானால் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும், இராணுவத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் அப்பொழுதுதான் ஒரு நிலையான தீர்வு ஏற்படும். கிழக்கில் கருணா குழுவினர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்களினால் கிழக்கில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 3500 போராளிகள் இயக்கத்தைவிட்டு விலகிச்சென்றுள்ளனர். முக்கியமான ஆயுதங்கள் கருணாவினால் அழிக்கப்பட்டன. இவைகள் எல்லாவற்றிற்கும் அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ளது. இது புலிகளின் குற்றச்சாட்டாகும். இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அரசாங்கம் உடனடியாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் எங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் யாவும், ஏனைய வறிய நாடுகளுக்குச் சென்றடையும். இந்த நிதியுதவிகள் கிடைக்காவிட்டால் நாட்டில் அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியாது. பொதுமக்களின் வாழ்க்கைச்சுமை அதிகரிக்கும். பொருட்களின் விலை அதிகரிப்பு, வடகிழக்கு அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைவதுடன் பொதுமக்களின் எதிர்ப்புகள் அரசாங்கத்திற்கு அதிகரிக்கும். நாட்டில் அமைதி ஏற்படாது.

பாராளுமன்றத்தில் அதிக பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் சிறுபான்மை தமிழ் இனத்தவர்களின் ஆதரவை சனாதிபதி பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின்னடைவுகளினால் அரசாங்கம் நாளுக்கு நாள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதைத் தவிர்க்கமுடியாது. சமஷ்டி ஆட்சி முறையால் நாடு பிளவுபடும் என்று சிங்கள மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இது எமது அரசியல் வாதிகளின் தவறான அணுகுமுறையாகும். பண்டார நாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் தவறான அணுகுமுறையால் முறிவடைந்தது. அன்று பண்டாரநாயக்க-செல்வநாயகம்

பேராசிரியர் குமார்ருபசிங்க
(லங்காதீப)
மொழியாக்கம் அ.சக்திவேல்

ஒப்பந்தம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தால் இந்த நாட்டில் பேரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது. நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லும்பொழுது சிங்கள மக்களினதும் அரசாங்கத்தினதும் பாதுகாப்பு உத்தரவாதத்தை சர்வதேசத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். விஷேசமாக இந்தியாவிடமிருந்து இந்தப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாடு பிளவுபடாத சமஷ்டி ஆட்சி முறையினை இரு பிரதான கட்சிகளும் தற்பொழுது ஏற்றுக் கொண்டுள்ளன. சிங்கள மக்களின் அபிலாசை இதுவாகும். ஆனால் அரசாங்கத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக சந்தேகம் ஏற்பட்டால் அதற்கு உத்தரவாதமளிக்க இந்தியாவின் உதவி அரசுக்குக் கட்டாயமாகத் தேவைப்படும். அப்பொழுது சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு இலங்கை அரசுக்குக் கிடைக்கும். சமஷ்டிஆட்சிமுறை தோல்வியுற்றது எந்தநாட்டிலும் கிடையாது. ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நிலையான சமஷ்டி ஆட்சி முறைகள் நடைமுறையில் உள்ளன. ஆட்சிமுறை தோல்வி அடையவில்லை.

இந்தியாவின் புதிய அரசு இலங்கை நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்தப் பட்டால் முழு ஆதரவையும் வழங்கப் போவதாக சமீபத்தில் உறுதி கூறி உள்ளது. மேலும் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக சில விடயங்களை இந்திய அரசு கவனத்தில் எடுத்துள்ளது. உள்நாட்டில் பிரச்சினைகள் இலங்கை அரசுக்கு ஏற்பட்டு அதைத் தீர்க்க முடியாமல் போனால் இந்தியா இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் தலையிடுவதற்கு உரிமை உண்டு என பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது விடுதலைப் புலிகளின் அரசியலில் பெரும் மாற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. முதலில் வடகிழக்கின் புனர்நிர்மாண வேலைகளை ஆரம்பித்தல், சீரழிந்த வடகிழக்கை கட்டி எழுப்பி மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டி எழுப்புதல் இருபது வருடகால யுத்தத்தின் விளைவுகள் முக்கிய பிரச்சினையாக அமைந்துள்ளது. வடகிழக்கில் ஆரம்பிக்கப்போகும் அபிவிருத்தித் திட்டத்தால் தெற்கும் மிகப் பயனடையும். அரசும் விடுதலைப்புலிகளும் பகிர்ந்துகொண்டு வெற்றிகரமாக இச்செயல் திட்டத்தை அமுல்ப்படுத்த முடியும். சமஷ்டி ஆட்சிமுறைக்கு வடகிழக்கு மக்களின் அமோக ஆதரவு இருக்கின்றபடியால் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நெருக்கடிகளைக் கொடுத்தவண்ணமுள்ளனர். சமஷ்டி ஆட்சிமுறையை அமுல்ப்படுத்த வேண்டுமானால் மூன்றில் இரண்டு அதிக பெரும்பான்மை அரசாங்கத்திற்கு வேண்டும். அப்படி பெரும்பான்மை பெறுவதற்கு எதிர்க்கட்சியின் ஆதரவு அரசாங்கத்திற்குத் தேவை. ஆனால் தற்போதைய அரசியல் நிலையில் அது சாத்தியப்படமாட்டாது. எதிர்க்கட்சியின் ஆதரவு அரசாங்கத்திற்குக் கிடைக்காது.

தீர்க்க முடியாத சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக விரிவாக பேசித்தீர்வு காண்பது மிக அவசியம். இதற்கு பொதுமக்களின் அபிப்பிராயம் தேவைப்படாது. சமஷ்டி ஆட்சிமுறைபற்றி சமரசமாகப் பேசி விடுதலைப் புலிகளுடன் தீர்வு கண்டால் அரசாங்கத்தின் ஆயுள் நீடிக்கும். இல்லையேல் ஆயுள் மிகக் குறையும்.

# கசரோகம் (TUBERCULOSIS)

சமூகம் இந்த நோயையும், இந்த நோயாளிகளையும் அருவருப்புடன் பார்ப்பது என்னவோ கஷ்டமாக இருந்தாலும், நோயாளிகளின் தொடர்ச்சியான இருமலும், அதன் போது வெளிவருகின்ற சளியை நோயாளி துப்பும் விதமும் ஒருவகையில் ஏனையோரை அருவருக்கவே செய்யும் .யாராவது ஒருவருக்கு சாதாரணமாகவே இருமல், சளி அதிகநாள் இருந்து விட்டால் "இவனுக்கு கசம் தான் " என்று சொல்லுமளவுக்கு எமது மக்களிடம் இந்நோய் குறித்து அக்கறை, கரிசனை இருக்கிறது. முன்னரெல்லாம் இந் நோயாளிகளை தனிமைப்படுத்தி அவர்களை சமூகம் என்ற கட்டமைப்பில் இருந்து ஒதுக்கி மான்தீவு வரை கொண்டு சென்று புனர்வாழ்வளித்த துயரங்கள் கூட இந் நோயாளிகளுடன் இருக்கும் வரலாறு.

இவற்றிக்கு எல்லாம் காரணம் இல்லாமலில்லை . சுவாசத் தொகுதியுடன் ஆரம்பத்தில் தொடர்புடைய இந் நோய் வேகமாக ஒருவரில் இருந்து இன்னொருவருக்குப் பரவுவது மட்டுமல்லாமல், உடலில் ஏனைய உறுப்புகளுக்கும் பரவி உயிர்குடிக்கும் ஆட்கொல்லியாகவும் உருவெடுக்கும். எனவே இங்கு மீண்டும் ஒருதடவை நாம் கூறுவது இந்நோய் மட்டில் வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும் என்பதாகும்.

## நோய்க்காரணி:-

இது "மைக்றோபற்றீரியம் ரீயூபகு லோசிஸ்" (Mycobacterium tuber culosis) எனப்படுகின்ற "பக்றீரியாவினால்" பரப்பப்படுகிறது. இந்நோய்க் கிருமிகள் சிறுதுளி தொட்டுமூலம் அதாவது தும்மல், இருமல், சளி என்பவற்றின் ஊடாக கொடையாளியூடாக ஏனையோருக்குப் பரவும்.

## நோய் அறிகுறிகள்:-

ஆரம்பத்தில் எவ்வித அறிகுறிகளையும் காட்டாது. நாளடைவில்,

i.காய்ச்சல்,
ii.சோம்பேறித்தனம்,
iii.அதிகமாக வியர்த்தல் குறிப்பாக இரவில் வியர்த்தல்,
iv.பசியின்மை,
v.உடலில் செந்நிறத் தழும்புகள்,
vi.தொடர்ச்சியான சளியுடன் கூடிய இருமல்,
vii வீக்கமடைந்த நிணநீர்க் கணுக்கள்,
viii. உடல் மெலிவடைதல்,
ix. இரத்தம் சளியுடன் வெளியேறல்.

ஆரம்பத்தில் சுவாசத் தொகுதி தொடர்பாக நோய் தோற்றுவிக்கப்பட்டு மெல்லஏனைய தொகுதிகளையும் ஆக்கிரமித்துக்கொள்ளும். நாளடைவில் கொல்லும். கசரோகம் சிறுநீரகங்களை, மூளைமென் சவ்வுகளை, சிறுநீர்சனனித் தொகுதிகளை, என்புகளை, தோலை, இதயத்தை என்று எல்லாவற்றிலும் தொற்றை ஏற்படுத்தும். இங்கு எமது உடலின் எதிர்ப்பு சக்திக்கும் நோய்க்கிருமிகளின் வீரியத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற பலப்பரீட்சையின் விளைவாக நோய்த்தொற்றலும் பரவலும் தங்கியிருக்கும்.

## நோயைக் கண்டுபிடித்தல்:-

ஒருநோயாளியின் நோய் இன்னதுதான் என்று கண்டறிந்து அதற்குரிய சரியான மருத்துவத்தைக் கொடுக்க வேண்டும் இந் நோயைக் கண்டுபிடிக்க.

i.நோயாளியின் நோய் பற்றியசரிதம்,
ii..வைத்தியரின் உடல் பரிசோதனைகள்
iii..மேற்குறிப்பிட்ட இரண்டுவிடயங்களின் அடிப்படையாக செய்யப்படுகின்ற பரிசோதனைகளின் முடிவே நோயைக்கண்டு பிடிக்க உதவும்.

i. சளியை நுணுக்குக் காட்டியூடாக அவதானித்து நோய்க்கிருமியை கண்டறிதல்- மிகச்சிறந்த முறை.
ii.கதிர்ப்படம் (நுரையீரல்) } நோய்இருப்பது பற்றி
iii.இரத்தப்பரிசோதனைகள. } அனுமானிக்க உதவும்.

## மருத்துவ சிகிச்சை

நோயைக் கண்டறிந்த பின்னர் நோயாளியை குறிப்பிட்ட காலத்திற்கு தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதே சிறப்பானது. ஏனெனில் இந்நோய்க்கிருமிகள் இலகுவாக ஏனையோருக்கும் பரவலாம்.

நான்கு வகையான மாத்திரைகள் பாவிக்கப்படுகின்றன. இதில் இரண்டு வகையான மாத்திரைகள் தொடர்ச்சியாக நான்கு மாதங்களிற்கும், ஏனைய மாத்திரைகள் இரண்டு மாதங்களிற்கும் பாவிக்கப்படுகின்றன.

I.ரிவாமிசின் (Rifampicin) } 4 மாதத்திற்கு
II.ஐசோநியாசிட்(Isoniagid) } எடுக்கவேண்டும்.
III.பைரசினைமற் (Pyraginamide)
IV.எதம்பியூட்டோல் (Ethambutol)

## நோய் ஏற்பட்ட காலத்தில்.

நோய் ஏற்பட்ட காலத்திலும் மருத்துவ சிகிச்சையின் போதும் நோயாளிக்கு ஊட்டச்சத்துள்ள நிறையுணவுகளைக் கொடுக்கவேண்டும். ஆரம்பத்தில் நோயாளியைத் தனிமைப்படுத்தி வைத்தியசாலையில் வைத்து மருந்து வகைகளைக் கொடுக்கவேண்டும். அத்துடன் நோயாளி மார்பு சிகிச்சைப்பிரிவிற்கு சென்று தொடர்ச்சியாக மருந்து வகைகளை எடுப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

நோயாளிகளை நாமமிட்டு ஒதுக்கும் எமது சமூகத்தில் அவர்கள் ஒழுங்காக மருந்து மாத்திரைகளை எடுப்பதை உறுதிப்படுத்தினால் அவர்களும் தமது இயல்பு வாழ்வை ஆரோக்கியமாகக் கொண்டுசெல்லஉதவும். அத்துடன் நோயாளிகள் பாவிக்கும் மாத்திரைகளிற்கு பக்க விளைவுகளும் இருப்பதால் வைத்திய ஆலோசனை யுடனேயே மாத்திரைகளை எடுக்க வேண்டும்.

வைத்திய கலாநிதி
பா.யூடிரமேஸ் ஜெயக்குமார்

# எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்ய அரசாங்கம் தீவிர நடவடிக்கை

## ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எதிர்க் கட்சிகளின் சனநாயக நகர்வுகளை அடக்க முனைவதாக ஜீ.எல். பீரிஸ் குற்றம் சுமத்தினார். பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்ற முனைவது, ஊடகங்களை தவறான வழி நடத்துவது, பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் பின்னரும் கூட அண்மையில் பதவி உயர்வு வழங்கப்பட்ட பொலிசாருக்கான நிகழ்வு சனாதிபதி மாளிகையில் நடைபெற்றமை போன்றவை அரசாங்கத்தின் பிழையான நகர்வுகளாகுமென ஜீ.எல் பீரிஸ் குறிப்பிட்டார். இதற்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹிங்குராங்கொடவில் விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது மக்கள் விடுதலை முன்னணியினரே தாக்குதல்களை மேற்கொண்டதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் தமது பிரசாரக் கூட்டத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி தாக்குதல் நடத்தியதால் 6பேர் வரை காயமடைந்ததாக மக்கள் விடுதலை முன்னணி செய்த முறைப்பாட்டை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜெயரட்ண உட்பட மூவரை பொலிசார் கைது செய்ய நடவடிக்கைஎடுத்துள்ளனர். (32)

# வேலையற்றோருக்கு விரைவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

## சிறி. அரசு கூறுகிறது

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரத்திலும், சாதாரணதரத்திலும் சித்தி பெற்றுள்ளவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பளிக்கத் தீர்மானித் திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதைவிட தரம் 8 ,தரம் 10 ஆகியவற்றில் சித்திபெற்றவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பாலான அரச நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப இவை குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வங்கிகளில் பணியாற்ற இலிகிதர்கள் பற்றாக்குறை இருப்பதாகக் குறிப்பிட்ட அவர் இப்பதவிகளுக்கு புதிதாக ஆட்கள் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைகளைக் கலைத்து விட ஐ.ம.சுதந்திர முன்னணி நடவடிக்கை

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தகவல்

(கொழும்பு)

மாகாண சபைகளை தமது அரசாங்கம் கலைத்து விடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மூலம் இலங்கையில் சரியான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க முடியாது. எனவே 1987 ஆம் ஆண்டு தாம் எதிர்த்த மாகாண சபைத் திட்டத்தை இன்றும் எதிர்ப்பதாக ஞாயிறு ஹிங்குறாங்கொடவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் தெரிவித்தார். தமது கட்சி நாட்டுக்கு புதிய நிர்வாக முறை ஒன்றை அறிமுகப்படுத்தப் போவதாகவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். (32)

# வெண்புறா நிறுவனத்தினரால் பழமரக் கன்றுகள் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கரும்புலிகள் நாளன்று காலை 9.30மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் வன்னி மாவட்டத்தில் பயன்தரும் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

வலுவிழந்தோருக்கு வெண்புறா நிறுவனத்தால் இவை வழங்கப்பட்டன. மாங்குளம் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பகம் மற்றும் நெடுங்கேணி கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகம், முல்லைத்தீவு கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகம், புதுக்குடியிருப்புக் கைவேலி வெண்புறாநிறுவனத்தில் 7முச்சக்கரவண்டி, 7 இரு சக்கரநாற்காலிகள்,துவிச்சக்கர வண்டி மற்றும்பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (சோ,கு)

# வரட்சி நீடித்தால் காட்டுத் தீ

(கொழும்பு)

சிறிலங்காவின் வனப்பரிபாலனத் திணைக்களம் தற்போதைய வரட்சி நிலை தொடருமாயின் நாட்டின் பல பாகங்களிலும் காட்டுத்தீ ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளது.

அடுத்துவரும் சில மாதங்களில் வரட்சி போன்ற இயற்கைக் காரணிகளாலோ, அக்கறையின்மை மற்றும் வேண்டுமென்றே தீ மூட்டப்படுதல் போன்றவற்றாலோ காட்டுத் தீ ஏற்படும் சாத்திய முள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவோர்வீதிக்கு ஊற்றுவதற்காக தார் கொதிக்க வைத்த பின் அந்த நெருப்பை அணைக்காது விட்டுச் செல்வதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டு நிலம் அழிக்கப்பட காரணமாகிறது எனக் கூறப்படுகிறது.

# ரத்ன சிறி விக்கிரமநாயக்க உட்பட மூவரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரத்ன சிறி .விக்கிரமநாயக்க மற்றும் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்கள் கட்சியின் பொதுத் தேர்தல் தேசியப் பட்டியலில் இல்லாத போது அவர்கள் இருவரையும் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமித்தமை தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகுமெனக் கூறி சுயாதீன தேர்தல் குழுவின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். (32)

## கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்மடு நகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில்யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தின் திறப்புவிழா இன்றுகாலை 9.00மணிக்குநடைபெறும்.

பிரதமவிருந்தினராக யுனிசெப் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி செல்வி.பென்னிபுறுனே கலந்துகொள்வார். (சோ.கு)



கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சலரோக மற்றும் இரத்தஅழுத்த நோயாளர்கள் மருந்தினைப் பெறுவதற்குக் கடந்தவாரம் வரிசையில் காத்துநின்றதைப் படத்தில் காணலாம். (படம்:- சோதி)

- ஹிங்குராங்கொட விகாரையில் -

# ஆயுதங்களுடன் பொலிசாரிடம் சிக்கிய 14 தமிழ் இளைஞர்களுக்கும் பிணை!

(கொழும்பு)

ஹிங்குராங்கொட உப்பிள் விகாரையில் ஆயுதங்களுடன் தங்கியிருந்தவேளை கைது செய்யப்பட்ட பதின்நான்கு மட்டக்களப்பு தமிழ் இளைஞர்களும் தலா இரு பத்தையாயிரம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 14 இளைஞர்களும் கைது செய்யப்படும்போது. 20ரி-56 தானியங்கி ஆயுதங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி மற்றும் கைத்துப்பாக்கிகள் ஆகியவற்றுடன் புதியவான் ஒன்றும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

இவர்கள் மீது விசாரணை நடத்திய ஹிங்குராங்கொட பொலிசாரிடம் தாங்கள் தெப்பிக்கலவிற்கு பயணம் செய்யவிருந்ததாகவும், இரவு வேளை பயணம் செய்ய முடியாத நிலையிலேயே விகாரையில் தங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைக் கர்த்தாவே இவர்களை ஹிங்குராங்கொட உப்பிள் விகாரைக்கு அனுப்பியதாகவும், இந்த விகாரைப் பிக்குவும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவாளர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க; இவர்கள் ஏற்கனவே பல தடவைகள் இங்கு தங்கிச் சென்றதாகவும்,நேற்று முன்தினம் இவர்கள் மொறட்டுவ நகரசபைக்கட்டடத்தில் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இவர்கள் தங்கியிருந்த விகாரைக்கருகில் சிறிலங்கா இராணுவத்தின் விசேட படையினரின் முகாம் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அரையாண்டில் 297 வாகனத் திருட்டு 25 வாகன சாரதிகளும் படுகொலை!

## சிறிலங்கா பொலிஸ் அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 297வாகனங்கள் திருடப்பட்டுள்ளன. மேலும் 25 சாரதிகளும் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவில் கார்த்திருட்டு அபாயகரமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சட்ட அமுலாக்கல் அதிகாரிகளிடையே தீவிர அக்கறையை ஏற்படுத்தும் அளவிற்கு "கார்த் திருட்டு" உயர்ந்து வருகிறது.

இந்தஅபாயத்தை இல்லாதொழிப்பதற்கு சிறிலங்காப் பொலிசார் நாடளாவிய ரீதியிலான புலனாய்வு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் அறிக்கைகளின் படி இந்த வருடத்தில் இன்று வரை 22 சொகுசு வாகனங்கள் உட்பட 297 வாகனங்கள் திருட்டுப் போயுள்ளதாகவும் ,25 சாரதிகள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# ஏமாற்றும் நடவடிக்கையில் சனாதிபதியின் உறவினர்!

(கொழும்பு)

மத்திய மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் சந்திரிகாவின் ஆதரவுவேட்பாளர் ஒருவர் அம்மாகாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலை வழங்குவதெனக்கூறி 70ஆயிரம் விண்ணப்பப்படிவங்களை விநியோகித்திருப்பதாகவும் இது தமது கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் ஜே.வி.பி. வேட்பாளர் ஒருவர் விசனம் தெரிவித்துள்ளார்.

மேற்படிவேட்பாளர் சந்திரிகாவின் உறவினர் என்றும், இந்நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறும் ஜே.வி.பி. கேட்டுள்ளது.

# தேர்தல் சட்ட விதிகளை சனாதிபதி சந்திரிகா மீறல்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி இன்று எட்டாந்திகதி மஹியங்கனையில் நடத்தவுள்ள கூட்டம் தேர்தல் சட்டத்திற்கு முரணான செயல் என ஐக்கிய தேசியக்கட்சியினர் தேர்தல் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றின் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதாவது மாகாணசபைத்தேர்தலுக்கான சகல பிரச்சாரங்களும் நேற்று ஏழாந்திகதியுடன் முடிவடைகின்றதென்பதையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் சுட்டிக் காட்டியுள்ளதோடு இக்கூட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான தேர்தல் பிரச்சாரம் நடத்துவதாகவே அமையுமெனத் தெரிவித்துள்ளனர்.

# அரசின் ஒப்பந்த மீறலால் இழப்பீடு வழங்கக் கோரல்

(கொழும்பு)

தம்முடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறியதாகக் கூறி சிறிலங்கா அரசாங்கத்திடம் கெர்மன் நிறுவனம் நட்டஈடு வழங்குமாறு கோரியுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அனுசரணையுடன், மோட்டார் வாகனங்களுக்கு இலக்கத்தகடு அச்சிடும் கெர்மன் நிறுவனம் அரசாங்கத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்த விதிமுறைகளை மீறி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் செயற்பட்டதால் அரசாங்கத்திடம் அந்த நிறுவனம் 15கோடி ரூபாய் நஷ்டஈடு கோரியுள்ளது.

# தென்கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக மோசடி!

(கொழும்பு)

தென்கொரியாவில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக தனியார் முகவர்களுக்கோ அன்றி தனிநபருக்கோ எத்தகைய அனுமதியும் வழங்கவில்லையென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதாகக் கூறி இளைஞர் யுவதிகளிடம் இருந்து பணம் பெறும் மோசடி நடைபெற்று வருவதாகவும், இத்தகைய மோசடிகளில் சிக்கவேண்டாமெனவும் அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.


# பணி வேண்டுகை கோரல்

பாண்டியன் வாணிபத்தில் கீழ்வரும் பணிநிலைக்கான வேண்டுகைகள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழ்வரும் தகுதிகளை உடைய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் வேண்டுகை செலுத்தவும்.

## களஞ்சியக்காப்பாளர் / பதிவாளர்

கல்வித் தகைமை :- க.பொ.த. சாதாரணதரத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் (க.பொ.த.சாதாரண தரத்தில் வர்த்தகம் கற்றவர்களுக்கும், க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகம் கற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பங்களைச் செலுத்தலாம்.

## விற்பனையாளர்கள்

கல்வித் தகைமை :- ஆண்டு 10இல் கல்வி கற்றவர்கள்.

ஆண்கள் மட்டும்.

## பொது

அகவை :- 18-40
சம்பளம் :- நிதித்துறை சம்பளத்திட்டத்துக்கு அமைய
வேண்டுகை முடிவுத்திகதி :- 12-07-2004

வேண்டுகை செலுத்த வேண்டிய முகவரி:-

பாண்டியன் வாணிபம் - கிளிநொச்சி.
பாண்டியன் வாணிபம் - புதுக்குடியிருப்பு.
பாண்டியன் வாணிபம் நடுவப் பணிமனை - விசுவமடு.

ஆளுநகை,
பாண்டியன் வாணிபம்,
விசுவமடு.

(சி-10002)


# ஓராண்டு நினைவு




## அமரர்
## தம்பையா—நிதராமவீரலிங்கம்
## [ஓய்வு பெற்ற அதிபர்]

மண்ணில்:- 16-12-1941
விண்ணில்:-20-06-2003
திதி:- 08-07-2004

*காலம் எல்லாம் எங்களோடு*
*இருப்பாய் என்று காத்திருந்தோமப்பா*
*கணப்பொழுதில் எங்களை*
*விட்டு மறைந்து விட்டாயப்பா*
*ஓராண்டு ஓடி மறைந்தும்*
*ஓயவில்லை எங்கள் கண்ணீரப்பா*
*வாழும் போது பள்ளி*
*அதிபராய் இருந்தீரப்பா*
*உம் நினைவாய் அமைத்திட்டோமப்பா*
*பாலர் பள்ளி - இந்நிறைவோடு*
*கண்ணீர்ப் பூக்களை காணிக்கை*
*ஆக்குகின்றோம் அன்பு அப்பாவே!*

08-07-2004 அன்று வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு திதி நினைவு நிகழ்விலும், தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

அம்பலவன் பொக்கணை
முள்ளிவாய்க்கால்
முல்லைத்தீவு (சி-9138)

தகவல்:-
**திருமதி. நிதராமவீரலிங்கம்,**
**குடும்பத்தினர்.**

# ஈராக்கிற்கு துருப்புக்களை அனுப்புவதில்லை மத்திய அரசின் கொள்கையில் மாற்றமில்லை

## - பிரதமர் மன்மோகன் சிங்

**ஈராக்கிற்கு இந்தியத் துருப்புக்களை அனுப்புவது எனும் பேச்சுக்கே இடமில்லை என்றும், இது தொடர்பான மத்தியரசின் கொள்கைகளில் மாற்றம் எதுவுமில்லை என்றும் பிரதமர் மன்மோகன்சிங் மக்களவையில் உறுதிபடக் கூறியுள்ளார்.**

நேற்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கிற்கும், பாரதிய ஜனதா, சிவசேனா உறுப்பினர்களுக்கு மிடையே ஈராக் தொடர்பாக காரசாரமாக விவாதம் நடந்தது.

இதன்போது இடையில் குறுக்கிட்டுப் பேசிய பிரதமர் மன்மோகன்சிங் ஈராக்கிற்கு இந்தியத் துருப்புக்களை இந்தியா அனுப்ப மாட்டாது என்றும், இது தொடர்பான கொள்கையில் மாற்றமேதும் இல்லை என்றும் உறுதிபடக் கூறியுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஈராக் தொடர் பாக மக்களவைக்கு தவறான கருத்தளித்துள்ளதாகக் கூறிய தேசிய சனநாயகக் கூட்டணி அவையை விட்டு வெளியேறியுள்ளது.





இந்தியாவின் கொல்கத்தாவில் நெரிசல்மிக்க புகையிரதத்தில் வெளியே நின்று தொங்கியவாறு பயணிக்கும் புறநகர்ப் பகுதிப் பயணிகள்.

## வலுவடைந்துவரும் இந்தியப் பொருளாதாரம்

(புதுடில்லி)

நிதிநிலை பற்றாக்குறைகளைச் சமாளிக்கும் வகையில் இந்தியப் பொருளாதாரம் வலுவடைந்து வருகின்றது என்று சர்வதேச செலாவணியத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்தியா ஏனைய நாடுகளுடன் பொருளாதார உறவுகளையும் வலுப்படுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நீதிமன்றம் மறுப்பு

நான்கு மாநிலங்களின் ஆளுனர்களின் பதவி நீக்க நடவடிக்கைக்கு எதிரான பொதுநலவாய மனு மீதான விசாரணையை மேற்கொள்ள இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மறுத்துள்ளது.

# இந்தியத் தூதரகம் செய்திக்கு மறுப்பு

(கொழும்பு)

தலைவர் பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் நாடு கடத்துமாறு சிறிலங்காவிடம் இந்தியா தற்போது கோரவில்லை. இவ்வாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புதிய அரசு தலைவர் பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு சிறிலங்கா அரசிடம் கோரியுள்ளதாக வெளியான செய்திக்கு இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை மறுப்புத்தெரிவித்துள்ளது.

# அரசு, எதிர்க்கட்சி இடையிலான கருத்துவேறுபாடு சமூகமானசெயற்பாடுகளை பாதிக்கக் கூடாது

## -பிரதமர் மன்மோகன் சிங்

அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்குமிடையில் இருக்கக் கூடிய கருத்து வேறுபாடுகள் பாராளுமன்றத்தின் சுமூகமான செயற்பாடுகளைப் பாதிக்க இடமளிக்கக் கூடாது என்று பிரதமர் மன்மோகன்சிங் எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இராணுவத்திற்கான குடியரசுத் தலைவர் விருது வழங்கிய நிகழ்விற்குப் பின்னர் பேசிய செய்தியாளர்களிடம் அவர் அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் இணக்கமான முறையில் பேச்சுக்கள் நடத்தலாம் என்று கூறியுள்ளார்.

# எதிர்க்கட்சி கூட்டணியை விட எமது கட்சியே மேலோங்கியுள்ளது

## -ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச

" ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சி கூட்டணிக்கு ஆதரவாக பாராளுமன்றில் 118 ஆசனங்கள் இருப்பதாகக் கூறினாலும் தற்போது அது 114 ஆகவே இருக்கிறது." எதிர்க்கட்சிகளின் கூட்டணியை விட எமது கூட்டணியே மேலோங்கியிருக்கிறது என ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இந்நாட்டின் இறைமை விடுதலைப்புலிகளிடமும், காணிகளை வெளிநாட்டவரிடம் ஐ.தே.முன்னணி விற்றுவிட முயன்றது என்று தெரிவித்துள்ள அவர் தமது கூட்டணி ஆட்சிக்கு வந்ததால் அது தடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் பெற்ற வரலாற்று வெற்றியின் பங்காளர்களாகிய நீங்கள் மாகாணசபைத் தேர்தலிலும் ஆதரவளித்து நாம் எதிர்நோக்கியுள்ள சவாலை வெற்றிகாண உதவவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது மக்கள் பலம் கிடையாது என்றும், மேலும் அவரின் ஆட்சி தொடர்ந்திருப்பின் சிங்கராஜவனம், ரிட்டிஹெல, ஹோர்டன் போன்ற வளம் நிறைந்த இடங்கள் அழிந்து மறைந்திருக்கும் என்று தெரிவித்துள்ளார். பிரிவினை வாதிகளுக்கு நாட்டைப் பிரித்து கொடுப்பதை நீங்கள் உணரவில்லையா என வினவிய அவர், ஊடகங்கள் சில ரணிலுக்கு ஆதரவாக செயற்பட்டாலும் அரச ஊடகங்கள் சரியான தகவல்களையே வழங்குவதாகத் தெரிவித்தார். கூட்டத்தில் மேலும் பலர் உரையாற்றினர்.

# புகையிரத நிதிநிலை அறிக்கை ஏமாற்றமளிக்கிறது பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க.குற்றச்சாட்டு

புதியநிதி நிலையறிக்கையில் சுவையான அம்சங்கள் எதுவுமில்லை. பகட்டான சில அம்சங்களையே கொண்டுள்ளது. வளர்ச்சிக்கு இவை உதவாது.

இவ்வாறு நேற்று முன்தினம் புகையிரத அமைச்சர் லல்லுபிரசாத் யாதேவ் மக்களவையில் சமர்ப்பித்த புகையிரத நிதிநிலை அறிக்கை மீது முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா குற்றம் சாட்டியுள்ளது.

புகையிரத நிதிநிலை அறிக்கை ஏமாற்றம் அளிக்கின்றது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிக்கை மூலம் கூறியுள்ளார்.

# ஹெரோயி கடத்திய இரு இலங்கையர் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது

மூன்று கிலோ 'ஹெரோயின்' போதைப் பொருட்களுடன் இரண்டு இலங்கையர்கள் பாகிஸ்தானில் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"சர்வதேச ஹெரோயின் கடத் தல்காரர்களான இரண்டு இலங்கையரை மூன்று கிலோ ஹெரோயினுடன் நாங்கள் கைது செய்திருக்கிறோம் என பாகிஸ்தானின் போதைப்பொருள் தடுப்புப் படையின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் நஜாமுல் ஹசன் ஜமில் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குப் பாகிஸ்தானில் பஸ் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களின் சூட்கேஸினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகவும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அப்துல் ஹமீட் மற்றும் சதீஸ்குமார் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

# சார்க் நாடுகளிடையே தகவல் தொழில் நுட்ப கண்காணிப்புக்குழு அமைக்கத்திட்டம்

## - அமைச்சர் தயாநிதி மாறன்

தெற்காசிய ஒத்துழைப்புப் பிராந்திய நாடுகள் (சார்க்) இடையே தகவல் தொழில் நுட்பத்தைக் கண்காணிக்க பணிக்குழு ஒன்றை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது என்று மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் தயாநிதிமாறன் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் நாடுகளின் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் அவர் இதைத் தெரிவித்தார். சார்க் அமைப்பின் செயலகத்தின் கீழ் இந்தக் கண்காணிப்புக்குழு செயற்படும். இக்கண்காணிப்புக்குழுவில் சார்க் அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகள் இடம்பெறும் இது போன்று கண்காணிப்புக்குழு அமைப்ப தால் தகவல் தொழில் நுட்பத்தின் நவீன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும் இந்தக் கண்காணிப்புக் குழுவின் மூலம் பெறப்படும் புள்ளிவிபரங்கள் அந்தந்தப் பிராந்தியத்தின் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழிகாட்டியாக அமையுமென்றும் மாறன் தெரிவித்துள்ளார்.

# சாவு அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 |  | 05 |
| □ | | □ |
| 07 | | 07 |
| □ | | □ |
| 1982 | | 2004 |

**செல்வன்.இராமச்சந்திரன் சந்திரபோஸ்**

{ கொழும்பு இந்துக்கல்லூரியின் பழையமாணவன்<br>கணனி, பொறியியற்றுறை இறுதியாண்டு மாணவன் }

இல.719 சிவிக்ஸ் சென்ரர் வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராமச்சந்திரன் சந்திரபோஸ் 05.07.2004. திங்கட்கிழமையன்று கொழும்பில் அகாலச் சாவடைந்தார். இவர் ப.இராமச்சந்திரன் (அதிபர் பன்னங்கண்டி இந்து தமிழ் வித்தியாலயம்) சரோஜினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வனும், சந்திரப்பிரபா(டென்மார்க்), சந்திரப்பிரியா (கிளி.பாரதிபுரம்வித்தியாலய ஆசிரியை), சந்திரலேகா (கெயார் நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் முழங்காவில்), சந்திரிக்கா (இராமநாதன் நுண்கலைப்பீட 3ஆம் வருடமாணவி, சந்திரராஜ் (கிளி.மத்தியகல்லூரி உயர்தரமாணவன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், அருள்தண்சன்(டென்மார்க்) அவர்களின் அன்பு மைத்துனனும், லெயாக்கா (டென்மார்க்), வீவ (டென்மார்க்) அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பரமநாதன் ஆச்சிமுத்து,காலஞ்சென்ற சோமசுந்தரம் காமாட்சியம்மா தம்பதிகளின் பாசமிகு பேரனும். வள்ளியம்மை, சிவபாலச்சந்திரன் (லண்டன்) , யோகேஸ்வரி அம்மா, தனபாலச்சந்திரன் (ஜேர்மனி), பூபாலச்சந்திரன் (லண்டன்) ,பரமேஸ்வரி (கிளி.கனகபுரம் மகாவித்தியாலய ஆசிரியை), வளர்மதி (எழுதுவினைஞர் கூட்டுறவுத்திணைக்களம் கிளிநொச்சி), ரவிச்சந்திரன் (லண்டன்), சந்திரமோகன் ஆகியோரின் மருமகனும், கமலாதேவி (லண்டன்), புஸ்பராணி (கண்டி றோ.க.பாடசாலை ஆசிரியை), ரதிதேவி (கண்டி பெண்கள் உயர்தரப்பாடசாலை ஆசிரியை), சுசீலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்**
**ப.இராமச்சந்திரன் (தந்தை)**
**பன்னங்கண்டி அதிபர் இந்து தமிழ் வித்தியாலயம்.**

(4784)

# ஒலிம்பிக் ஹொக்கி போட்டியில் இந்தியா சிறப்பாக விளையாடும்

## துணைப் பயிற்சியாளர் ஜக்பிர் சிங்

இந்திய ஹொக்கிப் அணி ஏதென்ஸ் ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டியில் சிறப்பாக விளையாடும் என்று இந்திய ஹொக்கி அணியின் துணைப் பயிற்சியாளராக செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் ஹொக்கி முன்னாள் வீரர் ஜக்பிர் சிங் தெரிவித்துள்ளார். தற்காப்பு ஆட்டக்காரர்கள், முன்கள ஆட்டக்காரர்கள், நடுகள ஆட்டகக்காரர்கள் இடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததுதான் அணியின் குறை. நான் வீரர்களுடன் பேசினேன். அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு உள்ளனர். தேசம் எந்த அளவுக்கு எதிர்பார்கின்றதோ அந்த அளவுக்கு ஆட முடியும் என்ற நம்பிக்கை வீரர்களிடம் உள்ளது என்றார். அவர் 1988 முதல் 1992 வரையில் இந்திய ஹொக்கி அணியில் விளையாடியுள்ள ஜக்பிர், சியோல், பார்சினோலா ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடியுள்ளார். ஜக்பிர் இந்திய ஹொக்கி அணியுடன் வரும் 12ஆம் திகதி ஜேர்மனி செல்கிறார். ஜேர்மனியின் டெசல்டர்பில் ஜுலை 16ஆம் திகதி நடக்கும் நான்கு நாடுகள் போட்டியில் இந்தியா விளையாடுகிறது.

# வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாணமட்ட விளையாட்டுபோட்டி

வடக்கு கிழக்கு மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் வவுனியாவில் செவ்வாய்க்கிழமை முதல் நடைபெற்றுவருகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு பாடசாலைகள் வீதம் கலந்து கொண்டுள்ளன. முதல்நாள் இடம்பெற்ற உடற்பயிற்சி போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இந்தபோட்டிகளில் பெண்களுக்கான போட்டிகளில் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும்,கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை இரண்டாம் இடத்தையும், . யாழ். உடுவில் மகளிர் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன ஆண்களுக்கான போட்டியில் யாழ் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் முத லாம் இடத்தையும், கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், யாழ். ஹாட்லி கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இரண்டாம் நாள் இடம்பெற்ற கபடி போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவான வவுனியா பாவற்குளம் கணேஷ்வரா மகாவித்தியாலத்தை எதிர்த்து வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணிமோதியது. இந்தப்போட்டியில் இரண்டு புள்ளிகளால் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றது.7,8 திகதிகளில் கபடி, எல்லைப் போட்டிகளும் 8,9 திகதிகளில் கரப்பந் தாட்டப்போட்டிகளும் 12,13 திகதி களில் மேசைபந்து,பூப்பந்து, சதுரங்க ஆட்டம் வலைபந்து போன்ற போட்டிகளும் நடை.பெறவுள்ளன. (21)

## நட்வேட்ஸ் முக்கோணத் தொடர்

# மேற்கிந்தியத்தீவுக்கு சிறப்பான வெற்றி இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது இங்கிலாந்து

இங்கிலாந்து, நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகள் கலந்து கொள்ளும் 'நட்வேட்ஸ்' முக்கோண ஒரு நாள் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவு இங்கிலாந்து அணியை பின்னுக்குத் தள்ளியது.

ஆரம்பத்தில் இங்கிலாந்து அணியே வெற்றிபெறும் என கருதப்பட்டது. காரணம் 50 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 285 என்ற சிறப்பான ஓட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவு சர்வான் மற்றும் கிறிஸ் கெய்ல் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 5 பந்துகள் மீதமிருக்க 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. கெய்ல் ஆட்டமிழக்காது 132 ஓட்டங்களைப் பெற்றார். சர்வான் 89 ஓட்டங்களை வேகமாகப்பெற்றார்.

# சுவிஸ் ஒப்பன் டென்னிஸ் போட்டி: ரோஜர் பெடரருக்கு இலகு வெற்றி

சுவிற்சர்லாந்தில் நடைபெற்று வரும் சுவிஸ் ஒப்பன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் அந்த நாட்டின் பிரபல வீரர் ரோஜர் பெடரர் வெற்றிபெற்றுள்ளார்.

சுவிற்சர்லாந்தில் உள்ள ஸ்ராட் நகரில் நடைபெற்றுவரும் போட்டியின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அண்மையில் விம்பிள்டன் ஆடவர் பட்டத்தைக் கைப்பற்றிய நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர். ஜேர்மனியின் பக்ரண்டை எதிர்த்து ஆடினார்.

இதில் சிரமம் இன்றி விளையாடிய பெடரர் 6-1, 6-1 என்ற நேர் செட்டில் மிக எளிதாக வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

# இந்திய அணியில் ஹர்பஜன் சிங்

சிறிலங்காவில் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது. இதில் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் நீண்ட கால இடைவேளைக்குப் பின் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் அகக்கர் நீக்கப்பட்டுள்ளார். இதனைவிட இந்திய அணியில் புதிய மாற்றங்கள் எவையும் நிகழவில்லை.

# வேகத்தை அளக்கும் கருவியில் கோளாறு 100 வயது தடகள வீரரின் உலக சாதனை வீணானது

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதியோருக்கான தடகளப் போட்டியில் 100 வயதான தென் ஆபிரிக்கத் தடகள வீரர் பிலிப் 100மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை படைத்தார். ஆனாலும் அவர் படைத்த சாதனை வீணானது. காரணம் வேகத்தைப் பதிவு செய்யும் கருவியில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் அவரது வேகம் பதிவு செய்யப்படாமலே போய்விட்டது என்று திங்கட்கிழமை போட்டியை நடத்தியவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த முதியவர் ஒருவர் 100 மீட்டரை 36.10வினாடிகள் தாண்டியது தான் இதுவரை சாதனை. இப்போது பிலிப் அதைவிட கிட்டத்தட்ட 10 வினாடிகள் முன்னதாகவே வந்து அதாவது 26.17 வினாடிகளில் கடந்து சாதனை படைத்தார். வேகத்தை அளக்கும் கருவி இப்படி என்னை ஏமாற்றும் என்று எதிர்பார்க்கவில்லை. சாதனையைப் படைக்கக் கடுமையாக உழைத்தேன் பரவாயில்லை அடுத்த அக்டோபரில் நடக்கும் போட்டியில் இதைவிட வேகமாக வந்து சாதனை படைப்பேன் என்றார். ஒரு கனவு கண்டால் அதை தினம் முயன்றால் வானம் வசமாகும்.

# ஆட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் சகஜம் நானும் அதற்கு விதிவிலக்கல்ல

## சச்சின் டெண்டுல்கர்




கிரிக்கெட் ஆட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் சகஜம் என்றார் இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைசிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர். சென்னையில் திங்கட்கிழமை பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்தார்.

ஆட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் சகஜம். நானும் இதற்கு விதிவிலக்கு அல்ல. நான் அணியின் தலைவராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி என்னால் முடிந்த அளவுக்கு அணியின் வெற்றிக்குப் பாடுபடுவேன். அணி வெற்றிதான் மிக முக்கியம். தற்போதெல்லாம் நான் அடித்து ஆடுவதில்லை என்று கூறப்படுகிறது. அப்படியில்லை என்று நான் நினைக்கின்றேன். வீரேந்திர சேவக்குடன் இணைந்து ஒரு நாள் போட்டிகளில் அதிக அளவில் ஓட்டங்களைக் குவித்துள்ளேன். இந்திய அணியின் ஒரே இலக்கு வெற்றி. கடுமையான பயிற்சி, உழைப்பின் மூலம் வெற்றி பெறுவதே இலக்கு. சில சமயங்களில் முதுகு வலியால் பிரச்சினை எழுகிறது. மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் உடற்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். சேவக், லட்சுமணன் போன்றவர்கள் நன்றாக ஆடுவதால் என்னுடைய பளு குறைந்துள்ளதா என்று கேட்கிறீர்கள். எனக்கு என்று பொறுப்பு உள்ளது. மற்றவர்களும் அவர்களால் முடிந்த அளவுக்கு நன்றாகவே ஆடுகிறார்கள். சில நேரங்களில் அதிக ஓட்டங்களைக் குவிப்பவர். சில நேரங்களில் குறைந்த ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்து விடுகின்றனர். இது கிரிக்கெட்டில் சகஜம். முன்பெல்லாம் ஆடியதைவிட தற்போது மிகவும் அதிகமான போட்டிகளில் ஆடுவது உண்மை. இதனால் அதிக சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தொடர்ந்து அடுத்தடுத்து போட்டிகளில் பங்கேற்க வேண்டியுள்ளதால் உடல் நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது என்றார்.

# மேற்கிந்தியத்தீவின் எட்டு நகரங்களில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள்

2007 உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத்தீவுகளின் எட்டு இடங்களில் நடக்கவுள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஈஷான் மணி திங்கட்கிழமை தெரிவித்துள்ளார். போட்டி பெப்ரவரி முதல் ஏப்ரல் வரை நடக்கவுள்ளது. 9ஆவது முறையாக நடைபெறும் இப்போட்டியை மேற்கிந்தியத்தீவுகள் முதல் முறையாக நடத்துகிறது. 1975, 1979இல் மேற்கிந்தியத்தீவுகள் அணி கோப்பையை வென்றுள்ளது. ஆன்டிகுவா, பார்படோஸ், ஜமைக்கா, செயின்ட் கிட்ஸ், டெயின்ட் லூசியா, டிரினாட் அண்ட் டொபாகோ, கிரனேடா, கயானா ஆகிய இடங்களில் ஆட்டங்கள் நடக்கவுள்ளன. மேற்கிந்தியத்தீவுகளுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் முழு ஒத்துழைப்பும் அளிக்கப்படும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் மணி தெரிவித்துள்ளார். பல ஆண்டுகளாக கிரிக்கெட்டில் மேற்கிந்தியத்தீவுகள் ஆதிக்கம் செலுத்தி உலக கிரிக்கெட் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். போட்டியை நடத்துவதற்கான முழுத் தகுதியும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு உண்டு என்றும் அவர் தெரிவித்தார். இப்போட்டியில் 16 அணிகள் பங்கேற்கின்றன. 51 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. எந்தெந்தப் போட்டிகள் எங்கெங்கு நடைபெறும் என்று வரும் 12ஆம் திகதி நடைபெறும் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.




# ஜாகீர்கான் வருகையில் நிர்ப்பந்தம் இல்லை நாட்டுக்காக விளையாடுவது பெருமைக்குரியது

## இர்பான் பதான்




ஜாகீர்கான் மீண்டும் அணியில் சேர்வதால் எனக்கு எந்த நிர்ப்பந்தமும் இல்லை. அவரிடமிருந்து நான் நிறையக் கற்றுள்ளேன். நானும் அணியில் இடம்பெற்றால் அவருக்கு உதவியாகப் பந்துவீச்சில் எனது திறமையை வெளிப்படுத்துவேன் என்றார் பதான். ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் போது மிகச் சிறப்பாக பந்துவீசி எதிரணிகளை திணரடித்தவர் 20 வயதாகும் பதான். நடந்தது நல்லவையே. இனி அடுத்த போட்டிக்காக தயாராக உள்ளேன். என்னுடைய பந்துவீச்சுத் திறமையை மேம்படுத்திக் கொண்டுள்ளேன். முன்பு பந்தை 'ஸ்விங்' செய்வேன். தற்போது தொடர் பயிற்சியின் மூலம் அதைக் குறைத்துள்ளேன் என்றார் அவர். உலகப் புகழ் டென்னிஸ் வில்லி அளித்த பயிற்சி தனக்கு மிகப்பெரிய பலம் என்று கூறும் பதான் நாட்டுக்காக விளையாடுவது என்பது பெருமை தரும் விடயம் என்றார்.



வட அவுஸ்திரேலியாவில் உள்ள கெய்ன்ஸ் நகரத்தில் கசாலி விளையாட்டரங்கில் அவுஸ்திரேலிய வீரர் ஜசன் ஜிலஸ்பி பந்து போடும் பயிற்சியில் ஈடுபடுகின்றார்.

# எவ்வகைப் பந்து வீச்சையும் எதிர்கொள்ளத் தயார்

## சவால் விடுகின்றார் ஜெயசூரியா

ஆடுகளத்தில் குறுகிய தூரத்தில் பட்டு தெறிக்கும் பந்துகளை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக சிறிலங்காவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரிய அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களுக்கு சவால் விடுத் துள்ளார்.

இவ்வகையான பந்து வீச்சு தமக்கு நன்கு பழகிவிட்டதாகவும் இவை எமக்கு புதியவை அல்ல எனவும் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ள கெய்ன்ஸ் மைதானம் அவுஸ்திரேலியாவின் முக்கிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ற விதத்தில் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிந்தனைக்கு



இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-07-2004

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## நாளாந்தச் செய்தி

நாளாந்தம் பத்திரிகைகளில் வீதி விபத்துக்களுக்கென இடஒதுக்கீடு செய்ய வேண்டியதொரு அவலம் ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் மோதிக்கொண்டன, தடம்புரண்டன, பலர் மரணம், பலர் படுகாயம் என்பன போன்ற தகவல்கள் நாளாந்த செய்திகள் ஆகிவிட்டன. வீதியில் இறங்கினால் விபத்தில் இருந்து தப்பி வருவதென்பது பிரயத்தனம் மிக்கதொன்றாகிவிட்டது.

இத்தனைக்கும் வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இல்லை. வீதி ஒழுங்குகள் தொடர்பான அறிவிப்புக்களில் இருந்து காவல்துறையின் நேரடிக் கண்காணிப்புக்கள் வரையில் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. வீதி ஒழுங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும்,விபத்துக்களினால் விளையும் விபரீதங்கள் பற்றியும் அறிவுறுத்தல்களும் மேற்கொள்ளப்படாமலும் இல்லை.

இவ்வாறு இருந்தும் வீதிவிபத்துக்களில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதாகவில்லை. ஆகையினால் இவ்விபத்திற்கு இவற்றைவிட வேறு காரணிகளும் இருத்தல் வேண்டும். இந்த விடயத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது வாகனச் சாரதியின் மனநிலையும், உடல் நிலையும் அமைகின்றது. அதாவது கணிசமான விபத்துக்களுக்கு இவையே காரணமாக இருக்கின்றன.

வாகனச்சாரதிகள் பொதுவில் விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை என்பனவற்றோடு வாகனத்தைச் செலுத்தும் போது அசதியற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவை சாத்தியமாகும் பட்சத்திலேயே விபத்துக்கள் தவிர்க்கப்படக் கூடியவையாக இருக்கும். ஆனால் எமது சாரதிகளுக்கு இத்தகைய பண்புகள் இருப்பது மிகக்குறைவு.

எடுத்துக்காட்டிற்குப் பலவகை உதாரணங்களை பல்வேறு தேவைகளுக்கும் ஏற்ப சுட்டிக்காட்ட முடியும். ஒருவாகனம் மற்றொரு வாகனத்தைக் கடந்து செல்ல–முந்திச்செல்ல முற்படும் வேளையில் முன்னால் செல்லும் வாகன சாரதி அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதில்லை. இருசாரதிகளும் வாகனத்தின் வேகத்தை, அதிகரிக்க ஏற்படும் 'துரத்தல்' வீதிவிபத்திற்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகியுள்ளது.

ஒருவாறு பின்னால் வந்த வாகனம் முன்னால் சென்ற வாகனத்தை முந்தி விட்டது எனில் இச்சாரதியும் வேகத்தை அதிகரித்து ஒருபந்தயமே நடத்துபவர்களாக இருவரும் மாறிவிடுவர். இவ்வேளைகளில் மற்றவர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் செயல்களில்கூட அவர்கள் இறங்குவதுண்டு. வழிவிட்டுக்கொடுப்பதனால் பின்னால் வரும் வாகனம் கடந்து செல்ல முடியாத ஒடுங்கிய பகுதிகள், சரிவுப் பாதைகளில் அதையும் மீறி எதிரில் வாகனங்கள் தென்படும் போது கடந்து செல்வதற்கு இடம்விடப்படுகிறது. இது ஆபத்தை விளைவிக்கும் எனத்தெரிந்திருந்தும் மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்.

இதுவும் அல்லாமல் வாகனம் விலத்திச் செல்ல அனுமதிக்கப்படும் போது கூட வாகனத்தின் வேகம் இம்மியளவும் குறைக்கப்படுவதில்லை. உயர்வேகத்தில் வைத்தே வாகனங்கள் கடந்து செல்கின்றன. இந் நிலையில் ஏதாவது சிறு தடங்கல் ஏற்பட்டாலும் நிகழும் விபத்துக்களோ பாரதூரமானவையாக அமைந்துவிடக் கூடியவையாகும்.

இத்தகையதொரு நிலைக்கு சாரதிகளின் விட்டுக் கொடுக்காத போக்கும் சகிப்புத்தன்மைஇன்மையுமே முக்கியமானதொரு காரணியாகும். ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல முற்படுகின்றார் என்றால் முன்னால் செல்லும் சாரதி வழிவிடுதலே சிறந்ததும் சரியான வழிமுறையும் ஆகும். அதைவிடுத்து முந்திச் செல்ல விளையும் சாரதியோடு போட்டியிடுதல் தேவையற்றதொன்று. இது விபத்திற்கே வழிவகுக்கும். ஆகையினால் சாரதிகள் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

மறுவளமாக முந்திச் செல்ல விளையும் சாரதியும் முன்னால் செல்லும் சாரதியின் மனஉணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படுதல் வேண்டும். முன்னால் செல்லும் வாகனத்தின் சாரதி கடந்து செல்ல அனுமதிக்கும் மனநிலையில் இல்லை என்றதொரு நிலைமை வெளிப்படுமானால் மிகவும் சகிப்புத்தன்மையினை பின்னால் செல்பவர் கடைப்பிடித்தல் வேண்டும். ஆத்திரமோ,சீற்றமோ கொண்டால் சில விபரீதங்களை அது விளைவித்துவிடக் கூடும்.

இவையாவற்றிற்கும் மேலாக வாகனத்தைச் செலுத்தும் எச்சாரதியும் அதனைச் செலுத்தக் கூடிய மனநிலையிலும், உடல் நிலையிலும் உள்ளார என்பது முக்கியமானதாகும். அதாவது மனக் குழப்பம் மதுபானபாவனை, உடல்ரீதியிலான சோர்வு –குறிப்பாக நித்திரையின்மை – போன்ற காரணிகள் பெரும் விபத்துக்களுக்குக் காரணமாகி விடலாம்.

ஆகையினால் சீரான வீதிகள் வீதி ஒழுங்கு விதிகள் நேர்த்தியான வாகனங்கள் என்பனவற்றிற்கும் அப்பால் வாகனச்சாரதிகளின் குண இயல்புகளும் உடல், உள நிலைமையும் வாகனவிபத்துகளுக்கு காரணமாகின்றன. ஆகையினால் விபத்துக்களைக் குறைத்தல் தவிர்த்தல் என்ற விடயத்தில் வீதி ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்படுவது மட்டுமல்ல சாரதிகளின் நடத்தை தொடர்பான விடயத்திலும் கவனம் செலுத்தினாலேயே அதில் வெற்றி காண முடியும்.

# சனாதிபதியின் மகியங்கணை கூட்டம்

## ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்ப்பால் இரத்து

இன்று சனாதிபதி மகியங்கணையில் நடத்த இருந்த பொதுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சனாதிபதி செயகம் பொதுக்கூட்ட ஏற்பாட்டாளர்களான ஊவா சமாதான மன்றத்தினருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. என சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் எரிக் பெனான்டோ தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பங்கு கொள்ளவிருந்த இந்தக் கூட்டம் மாகாணசபைக் சட்டத்தின் கீழ் குற்றமான செயலாகும் என ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்ததுடன் தேர்தல் ஆணையாளரிடம் நேற்று முன்தினம் முறைப்பாட்டையும் செய்திருந்தது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைகளின் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் நேற்று. இரவுடன் முடிவடைகின்ற நிலையில் சனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி என்ற வகையில் செயற்பட்டு வருவதால் இந்த பொதுக் கூட்டம் பெரும்பாலும் பிரசாரக் கூட்டமாகவே கருதப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தனது கண்டனத்தை வெளியிட்டு இருந்தது. இந்த நிலையிலேயே சனாதிபதி பங்கு கொள்ளவிருந்த கூட்டம் இரத்துச் செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் இளைஞரின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பதவி உயர்வு

தமிழ் இளைஞர்களின் மீதான படுகொலைகளை முன்னின்று நடத்திய சிறிலங்கா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவருக்கு அண்மையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் அங்கத்தவராக இருந்த இவ் அதிகாரி, பல தமிழ் இளைஞர்களை கொலை செய்து பொல்கொடவாவியில் எறிந்தமை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர் எனவும், அண்மையில் இவர் இலங்கையில் இருந்து வெளியேறி வெளிநாடு ஒன்றிற்குச் சென்று திரும்பியதாகவும் இந்த ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

அழகுராணி ஒருவரின் கொலையுடன் சம்பந்தமுடையவரென குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையில் சிறைச்சாலை சென்று வந்த மற்றொருவரும் பதவியுயர்வு பெற்றிருப்பதாகவும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# எய்ட்ஸ் நோய்பற்றி பயிற்சி வகுப்பு

உலகில் இன்று வேகமாகப் பரவிவரும் எச்.ஐ.வி. எய்ட்ஸ் சம்பந்தமான பயிச்சிப் பட்டறை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமையகத்தால் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளை அலுவலகத்தில் எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. இப்பயிற்சி பட்டறையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்காக இம் மூன்று மாவட்டங்களில் இருந்தும் மாவட்டத்திற்குப் பத்து ஆசிரியர்கள் அந்தந்த மாவட்டத்திற்கான செஞ்சிலுவைச் சங்க கிளைகள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 96000 ஊழியர் தேர்தல் பணியில்

(கொழும்பு)

இம் மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாகாணசபை தேர்தல்களின் போது 96,000 பொதுச் சேவை ஊழியர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும் அரசிற்குச் சொந்தமான ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் செயலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறி. இராணுவத்தில் இணைப்பு

**-ம.உ. ஆணைக்குழுவிடம் புலிகள் தகவல்-**

விடுதலைப்புலிகளிடம் நேற்று தஞ்சமடைத்து பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் நாவிமன விதானகே வசந்த உபுல் குமார 18 வயதுக்குறைவான வயதில் இராணுவத்தில் சேர்ந்தாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் கவனத்துக்கு விடுதலைப்புலிகள் கொண்டு வந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

மேற்படி இராணுவவீரர் தனது பிறந்த திகதி 03.09.1982 என்றும் 1996 ஆம் ஆண்டில் தான் இராணுவத்தில் சேர்ந்தார் என்றும் தெரிவித்துள்ளார். இதன்படி இவர் இராணுவத்தில் சேரும்போது இவரது வயது 14 ஆக இருந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் இலங்கை இராணுவத்தில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சேர்க்கப்படுகின்றார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இ.நி.கோரிக்கை குறித்த விவாதத்தை ஒத்தி வைக்குக

**-கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை-**

தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தொடர்பான பாராளுமன்ற விவாதம் ஒத்திவைக்குமாறு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர். கொழும்புப் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சபாநாயகர் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கான்ஸ்டபிள் படுகாயம்

(கொழும்பு)

திருடர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

ரணசிங்க என்ற இப்பொலிஸ் கான்ஸ்டபிள் சில மாட்டுத் திருடர்களை துரத்திச் சென்ற போது அவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் படுகாயம் அடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருடர்களில் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மகாவெல பொலிஸ் பிரதேசத்திலேயே சென்ற திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# மா.சபைத் தேர்தல் பிரச்சாரம் நேற்றுடன் முடிந்தது

வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் நேற்று இரவு 12 மணியுடன் முடிவடைந்துள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மத்திய, மேல், தென், சப்பிரகமுவா, ஊவா, வடமத்திய மாகாணங்களுக்கான தேர்தலில் 316 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணையாளர் வாக்கு எண்ணிக்கையின் போது காவல்துறை மற்றும் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கக்கிளை யாழ்ப்பாணத்தில் திறக்க முடிவு

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கு சுகாதாரமும், உளவியலும் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் முடிவுசெய்துள்ளது. இதற்கான அலுவலகத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளை அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் இயங்க இருக்கிறது.

# பாராளுமன்ற நடவழிக்கைகளை ஐ.ம.சு.முன்னணி சீர்குலைக்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமென உறுதியளிக்கப்பட்டபோதிலும் நடைமுறை ரீதியாக அதனை ஊர்ஜிதம் செய்யவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவித்துள்ளார்.

இந்நிலை குறித்து அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

நேற்று இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக உரையாற்றிவேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. வேலை வாய்ப்பின்மை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கவில்லை. ஆனால், இது பற்றி கேள்வி எழுப்புவதற்குக்கூட வாய்ப்பளிக்காமல் பாராளுமன்ற நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார். மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உண்மையைப் பேசுவது ஐ.தே.கட்சி என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த மூன்று மாதங்களில் பாராளுமன்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிய கிரிக்கெட் சுற்றுப்போட்டி திட்டமிட்டபடி நடைபெறும்

## சிறி. கிரிக்கெட் நிர்வாகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஆசிய கிரிக்கெட் சுற்றுப்போட்டி திட்டமிட்டவாறு சிறிலங்காவில் நடைபெறும் என சிறிலங்காவின் கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த சிறிலங்காவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் குரல்தரவல் அதிகாரியான றைஇலங்ககோன்.

இந்தப் போட்டிகளுக்கான திட்டத்தை மாற்றுவதற்கான காரணம் எதுவும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை எந்த நாட்டின் கிரிக்கெட் சபையும் இந்தப் போட்டி அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டுமெனக் கோரவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜூலை 16 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை தொடரும்.

போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகள் மேலதிக பாதுகாப்புக் கோருமபட்சத்தில் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமெனவும் அவர் கூறி உள்ளதோடு இங்கு மோசமான நிலை இல்லை எனவும் எவரும் பாதுகாப்பிற்காகத் தம்மை அணுகவில்லை எனவும் அவர் மேலும் கூறி உள்ளார்.

# ஐ.ம.சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி பொலிசாரை அச்சுறுத்தியதாகக் குற்றச்சாட்டப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சென்ற திங்கள் மாத்தளை ஹரிசன் ஜோன்ஸ் மாவத்தையில் போக்குவரத்திற்கு இடையூறாக வாகனம் செலுத்தித் தடை ஏற்படுத்தியதற்காக ரத்தோட்டப் பிரதேச சபைத் தலைவரான ஆனந்த சனத் புஸ்பகுமார என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மது போதையில் வாகனம் செலுத்தியதுடன் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிசாரை அச்சுறுத்தியதாகவும் பொலிஸ் நிலையத்தின் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதாகவும் தெரிவித்துள்ள பொலிசார் இவர் மீதான விசாரணைகள் தொடர்வதாகவும் கூறியுள்ளனர்.

## அறிமுக விழா

கரும்புலிகளின் உணர்வுகள் தாங்கிய சிறப்பு வெளியீடான ஞானரதனின்-புயல்புகுந்த பூக்கள் (வீடியோப்படம்) செயல் வீரனின் கடற்கரும்புலிகள் பாகம்-7(ஒலிப்பாடல்கள்), இசைவாணர் கண்ணனின் கடற்புலிகள் பாகம்-8(ஒலிப்பாடல்கள்) கரும்புலிகள் வரலாற்றுடன் உயிராயுதம்-5 (வீடியோவிவரணம்) ஆகியவற்றின் அறிமுக விழா நாளை இடம்பெறவுள்ளது. கிளி/இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இவ்அறிமுகவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# காணாமற் போன மீனவர் நேற்று கரைதிரும்பினர்

வடமராட்சிக் கடற்பரப்பில் காணாமல் போயிருந்ததாகக் கூறப்படும் மூன்று உள்ளூர் மீனவர்கள் தமிழக மீனவர்களால் மீட்கப்பட்டு சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். வலிகாமம் வடக்கின் மயிலிட்டி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி கரையோரக்கிராமப் பகுதிகளில் குடியமர்ந்துள்ள இம் மீனவர்கள் மூவருமே கடந்த ஞாயிற்றுக்கிழமை தொழிலுக்குச் சென்றிருந்தவேளை காணாமற் போயிருந்தனர்.

எனினும் இவர்கள் பயணஞ் செய்திருந்த படகு இயந்திரக்கோளறு காரணமாக தமிழ் நாட்டின் தூத்துக்குடி கரையோரப் பகுதியில் கரையொதுங்கியிருந்ததாக கூறப்படுகின்றது. இந்நிலையில் தமிழக மீனவர்கள் மீட்கப்பட்ட இவர்களது படகு திருத்தஞ்செய்யப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர்கள் பாதுகாப்பாக வடமராட்சிப் பகுதியை நள்ளிரவு வந்தடைந்துள்ளனர். (27)

# ஹிங்குராங்கொடயில் மற்றுமொரு விகாரையிலிருந்து துப்பாக்கிகள், கைக்குண்டுகள் பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

ஹெல உறுமய பௌத்த பிக்கு வசித்து வந்த ஹிங்குராங் கொட பௌத்த விகாரையில் ஏழு துப்பாக்கிகள், ஆறு கைக்குண்டுகள் மற்றும் சிறு கைத் துப்பாக்கிகள், கையடக்க தொலைபேசி 10, ஜெலிக்னைட் குச்சிகள் ஆகியவற்றை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி இரவு விகாரையில் பொலிசார் மேற்கொண்ட சோதனையின்போது கண்டுபிடிக கப்பட்டுள்ளது.

பொலிசார் சோதனை இட்ட பொழுது அங்கிருந்த பிரதம குரு தப்பி சென்றுள்ளதாக பொலிசார் அறிவித்ததுடன், இவர் கடந்த பொதுத் தேர்தலின் பொழுது பொலநறுவ மாவட்டத்தில் ஹெல உறுமய கட்சியின் சார்பில் போட்டி இட்டவர் என தெரியவருகிறது.

# மு.காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட மூவரது மனுவை விசாரிக்க உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான குசைன் அகமத், பைலா, நிசாத் பதியுதீன், அப்துல் மஜீத் ஆகியோர் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்யும்படி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனுவை விசாரணை செய்யுமாறு உத்தரவிட்ட பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான உயர் நீதிமன்றம், இது தொடர்பான ஆட்சேபணைகளை வரும் 16ஆம் திகதிக்கு முன்னா சமர்ப்பிக்குமாறு பிரதி வாதிகளைக் கேட்டுள்ளது. இதேவேளை, பிரதி வாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டவர்களான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் செயலாளர் நாயகம் ஹசன் அலி ஆகியோருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் அதனுடன் தொடர்புடைய ஏனையோருக்கும்அழைப்பாணை விடுத்துள்ளது.

## கொள்ளுப்பிட்டி...

காப்பு உத்தியோகத்தர்கள் அவரைச் சோதனையிட முயன்றதாகவும் அதற்கு அப்பெண் எதிர்ப்புத்தெரிவித்ததாகவும் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் பிரிவினர் அப்பெண்ணை இரண்டு பெண் பொலிசாரின் உதவியுடன் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பெண் அமைச்சரின் அலுவலகம் முன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியபோது கைது செய்யப்பட்டதாகவும் தகவல் ஒன்று கூறுகின்றது.

இப் பெண் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட வேளையில், அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் இவரைச் சோதனையிட முயன்ற வேளையிலேயே அப் பெண் குண்டை வெடிக்கச் செய்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயப்பட்ட பொலிசாரில் பெண் பொலிசாரும் அடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் பொலிஸ் நிலையத்தில் நின்ற இரண்டு பொதுமக்களும் அடங்குகின்றனர். இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பெண்...

உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்ட பெண்ணுடன் தற்போது கைது செய்யப்பட்டுள்ள பெண் இருந்ததற்கான தகவல் கிடைத்துள்ளது. என்று உயரதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.க...

தாரிகள் ஊடுருவி உள்ளார்களென இராணுவப் புலனாய்வுத் துறையினர் தகவல் வெளியிட்டவேளை, ஐ.தே.கட்சி செய்தது என்ன? என கேள்வி எழுப்பியுள்ளது. கொழும்பில் குண்டுகள் வெடிக்காதென கூறி முன்னைய அரசு இருந்ததால் தற்கொலை கொலையாளிகள் அமைச்சு காரியாலயங்களுக்குள் கூட செல்ல முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் இந்நிலைமையை அறிவுடன் ஆராய்ந்து தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வரவேண்மென ஜே.வி.பி. மேலும் கோரியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றைய குண்டு வெடிப்புத் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் இது சமாதானத்தைக் குழப்பும் ஒரு சம்பவம் அல்ல எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களைக் குழப்பி அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதாகவும், குற்றம்சாட்டியுள்ள சுதந்திரக்கட்சி இந்தக் குண்டு வெடிப்பு குறித்து தமது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

## கருணாவை...

துள்ள அவர், சனாதிபதியும், அரசும சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து நாட்டிற்கு யுத்தத்தினை அல்ல சமாதானத்தை பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

## கிழக்கில்...

குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கருத்துத் தெரிவிக்கையில்; டக்ளஸ் தனக்கும், கருணாவிற்குமிடையிலே பல வித தொடர்புகள் இருப்பதை நேரடியாக ஊடகங்கள் ஊடாக ஒப்புக்கொண்டுள்ளார். இதனைவிட அரசின் அறிக்கையில் டக்ளசிற்கும், பல குழுக்களுக்குமிடையே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றின் காரணமாக இச் சம்பவம் நடந்திருக்கலாமென அரசின் அறிக்கைகள் வெளிப்படுத்தியுள் ளன என்றார்.

## கொழும்பின்...

அதிகரித்துள்ளோம். அத்துடன் வீதித் தடைகளை ஏற்படுத்தி உள்ளதுடன் ரோந்து நடவடிக்கையையும் அதிகரித்துள்ளோம் என்றார் சுமேத பெரேரா.

இச்சம்பவம் குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிக்கையில், இவ்வாறான சம்பவங்கள் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுத்துவிட முடியாது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில்; இந்தச் சம்பவம் சமரச முயற்சிகளைப் பாதிக்கும் எனத் தான் நினைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

# சாவு அறிவித்தல்

## செல்வராசா ஞானமலர்

வட்டுக்கோட்டை சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், அதிசய விநாயகர் வீதி விசுவமடு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ஞானமலர் 06-07-2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தணிகாசலம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், செல்வராசாவின் அன்பு மனைவியும், ஜீவர்ணவதி, புஸ்பரஞ்சிதம், சிவலோகநாதன், குகரஞ்சினி, தவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08-07-2004 இன்று மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விசுவமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. செல்வராசா
கணவர்

அதிசய விநாயகர் வீதி,
விசுவமடு மேற்கு.

(4786)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.